# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 ஆடி 2 திங்கட்கிழமை (17-07-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:164


## அரசமைப்பு சீர்திருத்த வரைவு

# இந்த நாடாளுமன்றில் சமர்ப்பிப்பு!

# அடுத்த நாடாளுமன்றில் வாக்கெடுப்பு!!

### இறுதிக் கிரியை இன்று

யாழ்ப்பாணம்,ஜூலை17

யாழ்.இந்துக்கல்லூரி மாணவன் சோமசுந்தரம் சஞ்சீவனின் இறுதிக் கிரியைகள் இன்று காலை இடம் பெறவிருக்கின்றன.

யாழ்.மாவட்டப் பாடசாலை மாண வர்கள் இன்று காலை பாடசாலைக் குச் சமுகமளித்து அங்கிருந்து இறு திக்கிரியைகளில் பங்குபற்றச் செல் வர் எனக் கூறப்படுகின்றது.

இந்தக் கொலையைக் கண்டிக் கும் வகையில் யாழ். பல்கலைக்க ழக மாணவர்கள் இன்று விரிவுரைக ளைப் பகிஷ்கரித்து கறுப்புப் பட்டி அணிந்து துக்கம் அனுஷ்டிப்பர் என பல்கலைக்கழக மாணவர் ஒன்றி யம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

## சந்திரிகா அறிவிப்பு

கொழும்பு,ஜூலை17

**இனப்பிரச்சினைக்குத் தீர்வாக முன்வைக் கப்பட்டுள்ள அரசமைப்புச் சீர்திருத்த வரைவு தற் போதைய நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். ஆனால் அதன்மீதான விவாதமும் வாக்கெடுப்பும் பொதுத் தேர்தலின் பின்னர் அமைக்கப்படும் புதிய நாடாளுமன்றத்திலேயே இடம்பெறும்.**

**இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று அறிவித்தார்.**

அரசாங்க அதிபர்கள் மற்றும் அரச நிர்வாக அதிகாரிகள் கூட்டம் நேற்றுக்காலை பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடந்த சமயம் அதில் கலந்து கொண்டு பேசுகையிலேயே ஜனாதிபதி இந்த அறிவிப்பை விடுத் தார். அங்கு அவர் மேலும் கூறியதா வது:-

நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன் னர் உத்தேச அரசமைப்புச் சீர்தி

(12ஆம் பக்கம் பார்க்க)

## பயணிகள் கப்பல் சேவையை துரிதப்படுத்த நடவடிக்கை

### குடாநாட்டில் 4 ஆயிரம் பேர் காத்திருப்பு

வெளியிடங்களுக்குச் செல்வதற் காக யாழ். சிவில்நிர்வாக அலுவல கத்தில் இதுவரை தமது விவரங் களை பதிவு செய்த நாலாயிரம் பேரை விரைவாக அனுப்ப நடவ டிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று யாழ். சிவில் நிர்வாக அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

'லங்கா முடித்த' கப்பலை அமர்த்தி இரண்டு அல்லது மூன்று தடவைகள் சேவையில் ஈடுபடுத்திக் கூடுதலான பயணிகளை அனுப்ப முயற்சி எடுக்கப்பட்டுள்ளது என்றும்-

அந்த முயற்சி பயன் அளிக் காத பட்சத்தில் 'சிற்றி ஒவ் றிங்கோ' கப்பலை வாரத்தில் இரு தடவைக ளாவது சேவையில் ஈடுபடுத்த முயற்சி மேற்கொள்ளப்படும் என்றும் - அவர் மேலும் சொன்னார்.

பாடசாலை விடுமுறையில் கொழும்பு செல்ல விரும்பும் ஆசிரி யர்கள், மாணவர்கள், பொதுமக்கள் தமது பதிவுகளை முன்கூட்டியே செய்யுமாறு அறிவுத்தப்பட்டுள்ளது.

ஜி.சீ.ஈ.(உயர்தர) பரீட்சைவினாத் தாள் மதிப்பிடும் பணிக்காக கொழும்பு செல்லவிருக்கும் ஆசிரி யர் மற்றும் அதிபர்கள் தமது பதிவு களை முன்கூட்டியே செய்யுமாறும் கேட்கப்பட்டுள்ளது. (இ-3)

# சஞ்சீவனின் மரணம் குறித்து நீதி விசாரணைக்குத் தயார்!

### படைத் தரப்பினர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்ஜூலை17

* யாழ். இந்துக் கல்லூரி மாண வன் சோமசுந்தரம் சஞ்சீவனின் மர ணம் குறித்து பக்கச்சார்பற்ற நீதி விசாரணை நடத்துவதற்குத் தயார். அத்தகைய விசாரணைகளில் தலை யிடாமல் அவை சுதந்திரமாக நடப் பதை படைத்தரப்பு உறுதிசெய்யும்.

* இத்தகைய விசாரணைகளுக் குத் தேவையான சாட்சியங்களை அளிக்க மக்கள் அச்சமின்றி முன் வரவேண்டும். அவர்களின் பாது காப்புக்கு முழு உத்தரவாதமும் உறுதியும் வழங்கப்படும்.

- இவ்வாறு இராணுவத் தரப்பில் நேற்று உறுதியளிக்கப்பட்டது.

சஞ்சீவனின் மரணம் தொடர்பாக ஆட்சேபத்தையும் கண்டனத்தையும் நேரில் வெளிப்படுத்துவதற்கு கல் விச் சமூகத்தைச் சேர்ந்த உயர் மட்டக் குழுவொன்று நேற்றுக் காலை இராணுவ - பொலீஸ் உய ரதிகாரிகளைச் சந்தித்தது.

யாழ்ப்பாணம் சுபாஸ் ஹோட்ட லில் இராணுவத்தின் 51 ஆவது படையணித் தலைமையகத்தில் இச்

(12ஆம் பக்கம் பார்க்க)

## றெலோ முக்கியஸ்தர்களைக் கொன்றவர் பாதாள உலக குழுவை சேர்ந்தவராம்

கடந்த வருடம் மே மாதம் 19ம் திகதி கொழும்பில் வைத்து றெலோ அமைப்பின் முக்கியஸ்தர்களைக் கொலை செய்தவர் பாதாள உல கக் குழுவைச் சேர்ந்த விஜயபாலன் எனத் தற்சமயம் தகவல் வெளியா கியுள்ளது.

கடந்த வெள்ளியன்று கொழும் பில் பொலீசாரின் சூட்டுக்கு இலக் காகி பிரஸ்தாப நபரான விஜயபா லன் உயிரிழந்திருந்தார்.

அவர் தொடர்பான விசாரனை களை நடத்திய பொலீஸார் விஜ யபாலனே றெலோ பிரமுகர்களைக் கொலை செய்ததாகத் தெரியவந் துள்ளது என்று கூறினர்.

இது விடயமாக தகவல் தெரி வித்த றெலோ நாடாளுமன்ற உறுப் பினர் அடைக்கலநாதன்(செல்வம்), பிரஸ்தாப நபருக்கு 15லட்சம் ரூபா பேரம் பேசியே புளொட் அமைப்பின் தளபதியாக இருந்து கிளைமோர் தாக்குதலில் கொல்லப்பட்ட மாணிக் கதாசன் இந்தக் கொலையைச் செய்வித்தார் என்று கூறியுள்ளார். (இ-164-3)

# தொலைபேசிச் சேவை சீராகாவிடில் ரெலிக்கொம் மீது சட்ட நடவடிக்கை!

### உரிமையாளர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டத்தில் முடிவு

யாழ்ப்பாணம்,ஜூலை17

யாழ். மாவட்டத்துக்கான தொலைபேசிச் சேவை உடனடியா கச் சீராக்கப்படாதுவிட்டால் ரெலிக் கொம் நிறுவனம் மீது சட்டநடவ டிக்கை எடுப்பது பற்றி ஆலோசிப் பது என்று - நேற்று யாழ். பல் கலைக்கழகத்தில் இடம்பெற்ற தொலைபேசி உரிமையாளர்கள் சங் கத்தின் அங்குரார்ப்பணக் கூட்டத் தில் முடிவுசெய்யப்பட்டது.

யாழ். பல்கலைக்கழக புவியி யல்துறைப் பேராசிரியர் இரா. சிவச் சந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் நூற்றுக்கு அதி கமான தொலைபேசி உரிமையாளர் கள் கலந்து கொண்டனர்.

'ரெலிக்கொம்' நிறுவனத்தின் நட வடிக்கைகள் தொடர்பாக இந்தக் கூட்டத்தில் உரையாற்றிய பலரும் கடுமையாக விமர்சனம் செய்தனர்.

'ரெலிக்கொம்' விவகாரத்தில் 'உதயன்' பத்திரிகை பக்கச் சார்பா

(12ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் கூட்டம் ஓகஸ்ட் 14இல்

கொழும்பு,ஜூலை17

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் அடுத்த மாதம்14 ஆம் திகதி பாரிஸில் நடைபெறவி ருக்கிறது.

கடந்த வருடங்களில் வழங்கப் பட்ட உதவிகளுடன் ஒப்பிடும்போது இம்முறை பெரியளவில் வெட்டு இடம் பெறலாம் எனக் கூறப்படுகின் றது.

இந்த நிலையைச் சமாளித்து கூடுதல் உதவியைப் பெறுவதற் காகவும் -

தேர்தலில் வெற்றிபெறுவதற்கா கவும் - அரசு அவசர அவசரமாக புதிய அரசமைப்பை நாடாளுமன்றத் தில் சமர்ப்பிக்க முனைந்துள்ளது என்று அரசியல் விமர்சகர்கள் தெரி வித்தனர். (இ-3)

# புலிகளின் பங்களிப்பில்லாத எந்தத் தீர்வும் பயன் தராது!

### பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லா கூறுகிறார்

மட்டக்களப்பு,ஜூலை17

"இனப்பிரச்சினைத் தீர்வுக்காக இந்நாட்டில் பல அரசியல் தலைவர் கள் ஒப்பந்தங்கள் செய்தும் இவற் றால் எவ்வித பயனும் கிட்டவில்லை. எனவே புலிகளை வெளியில் வைத் துக் கொண்டு எடுக்கப்படும் எந்தத் தீர்வும் முழுமையான பயனைத் தராது என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தெட்டத்தெளிவாக ஜனா திபதியிடம் கூறியிருக்கின்றது."

இப்படிக் கூறியுள்ளார் தபால் தொலைத் தொடர்பு, தொடர்பு சாத னத்துறை அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா.

மட்டக்களப்பில் கடந்த வாரம் நடந்த வைபவம் ஒன்றில் பேசுகை யில் அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த வாரம் இனப்பிரச்சினை தொடர்பாக ஜனாதிபதியுடன் ஆராய்ந்தபோது அரசின் தீர்வுக்கு நாடாளுமன்றம் ஆதரித்தாலும் புலி

(12ஆம் பக்கம் பார்க்க)

### அரிசி இறக்குமதி தடை

வெளிநாடுகளில் இருந்து அரி சியை இறக்குமதி செய்வதற்கு அர சாங்கம் தடைவிதித்துள்ளது.

உள்ளூர் விவசாயிகளுக்கு உதவவே இந்த நடவடிக்கையை ஜனாதிபதி எடுத்துள்ளார். (இ-9)

### நேற்று சந்திர கிரகணம்

ஆடிப்பிறப்பு - பௌர்ணமி - தினமான நேற்று முன்னிரவு பூரண சந்திர கிரகணம் நிகழ்ந்தது.

எனினும் நேற்று இருள்கவிந்த வேளை வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டதால் சந்திரன் செந்நி றமாகத் தோற்றுவதை யாழ்.மக்க ளால் பார்க்க முடியவில்லை.

சந்திரனின் முழுவடிவமுமே தோற்றாததால் பௌர்ணமி தின மான நேற்றிரவு 8.30மணி வரை அமாவாசை போன்று இருள் சூழ்ந் திருந்தது.

8.45 மணியளவில் கிழக்கு வானில் செந்நிறக் கோடாகத் தென் படத் தொடங்கிய சந்திரன் சில நிமிட நேரம் கழித்து படிப்படியாகப் புலப்பட்டு 9.30 மணிக்குப்பின் பூரண சந்திரனாகக் காட்சியளித்தது.(உ)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# அராஜகத்தின் பிடியில் அநியாயமாகச் சிக்கி

அமரத்துவம் அடைந்த நண்பனே!

## உனக்கு சிரம் தாழ்த்தி, கரம் குவித்து அஞ்சலி செலுத்துகிறோம்



**பிறப்பு**
26-07-1982

**பறிப்பு**
13-07-2000

இந்துவின் மைந்தன்

# சோமசுந்தரம் சஞ்சீவன்

(கணிதப் பிரிவு - 2001 அணி மாணவன்)

நிலைகெட்ட மாந்தரின் நெறிகெட்ட செய்கையால் தன்னுயிரை ஈந்துவிட்ட எம் ஆருயிர் நண்பனுக்கு எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குவதுடன் அவரை இழந்து பரிதவிக்கும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

ஆருயிர் நண்பனை இழந்து தவிக்கும்
**யாழ். இந்து மாணவர்கள்.**

(C/12241)

### முத்தரப்பு மாநாட்டில்

## அமெரிக்கா முதல்தடவையாக யோசனைகளை முன்வைத்தது

காம்டேவிட், ஜூலை 17

அமெரிக்காவில் நடைபெற்றுவரும் பலஸ்தீனப் பிரச்சினை குறித்த முத்தரப்பு மாநாட்டில் அமெரிக்கா முதல் தடவையாக தனது யோசனைகளை முன்வைத்துள்ளது.

அமெரிக்காவின் மத்திய கிழக்குக்கான தூதுவர் டெனிஸ்லோஸ் இந்த யோசனைகளை பலஸ்தீனத் தலைவர் யசீர் அரபாத்திடமும் இஸ்ரேலியப் பிரதமர் எகுட் பராக்கிடமும் தெரிவித்தார்.

அகதிகளின் நிலை, பலஸ்தீன எல்லைகள் குறித்து இந்த யோசனைகள் அமைந்திருந்ததாக அமெரிக்க அதிகாரி ஒருவர் கூறினார்.

பிரச்சினைகள் தொடர்பாக இஸ்ரேலின் நிலைப்பாட்டையே, அமெரிக்க யோசனைகள் வலியுறுத்துவதாக பலஸ்தீன வட்டாரங்கள் கருத்துத் தெரிவித்துள்ளன. (ஐ-ஒ)

### ஆர்ப்பாட்டம்

'பலஸ்தீன அகதிகளின் உரிமைகளை எக்காரணத்தைக் கொண்டும் யசீர் அரபாத் விட்டுக் கொடுக்கக் கூடாது' என்பதை வலியுறுத்திப் பலஸ்தீனியர்கள் ஜலாலியாவில் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர்.

காம்டேவிட் மாநாட்டில் அரபாத் பலஸ்தீன அகதிகளின் உரிமை தொடர்பாக விட்டுக்கொடுக்கும்போக்கைக் கடைப்பிடிப்பதாக நிலவும் செய்திகளை அடுத்தே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

இதேசமயம் மேற்குக்கரையில் கெப்ரோன் நகரில் பலஸ்தீனியர்களுக்கும் இஸ்ரேலிய அதிகாரிகளுக்குமிடையே நடந்த மோதலில் 11 பேர் காயமடைந்துள்ளனர். (ஐ-ஒ)

### மதக்கலவரத்தில் பங்குபற்றியதாக

## பால்தக்கரே மீது வழக்குத் தொடர மாநிலப் பொலீஸாருக்கு அனுமதி

சிவசேனைத் தலைவர் பால்தக்கரே மீது பொலீஸார் வழக்குத் தொடர



மகாராஷ்டிரா அரசு அனுமதி அளித்துள்ளது.

இதனைக் கண்டித்து கொட்டும் மழையிலும் சிவசேனைத் தொண்டர்கள் மும்பை நகரத்தில் வன்முறையில் இறங்கியுள்ளனர்.

1992—93 காலப் பகுதியில் மும்பையில் நிகழ்ந்த மதக் கலவரங்களில் பங்கேற்றதாகவும் தூண்டிவிட்டதாகவும் பால்தக்கரேக்கு எதிராகப் பொலீஸார் குற்றம் சுமத்தியிருந்தனர்.

இது தொடர்பாக வழக்குத் தொடர்வதற்கே இப்போது அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அனுமதி அளித்தது தொடர்பான அறிவிப்பை மாநிலத் துணை முதல்வர் சகன் புஜ்பால் விடுத்தார்.

பால்தக்கரே மீதான இந்தக் குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டால் 3 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை கிடைக்கும்.

இதேசமயம் —

தன்மீது பழிவாங்கும் போக்கை மாநில அரசு கடைப்பிடித்தால் அதன் விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்று பால்தக்கரே எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து சிவசேனைத் தொண்டர்கள் மும்பையில் தொடர்ந்து பெய்துவரும் மழையைப் பொருட்படுத்தாமல் வன்முறையில் இறங்கியதாகக் கூறப்படுகிறது.

மும்பை மதக்கலவரத்திற்குக் காரணமானவர் என்ற குற்றச்சாட்டு பால்தக்கரே மீது அப்போதே சுமத்தப்பட்டது.

ஆனால் அப்போது ஆட்சியில் இருந்த சரத்பவார் அரசு வழக்குத் தொடர அனுமதி வழங்கவில்லை.

அதன்பின் சிவசேனை—பாரதீய ஜனதாக் கூட்டணி மாநில ஆட்சியைப் பிடித்ததால் இந்த விடயம் கிடப்பில் கிடந்தது. (இ)

# தெஹ்ரானில் அடுத்தடுத்து பல குண்டுகள் வெடிப்பு!

தெஹ்ரான், ஜூலை 17

ஈரான் தலைநகர் தெஹ்ரானில் அடுத்தடுத்துப் பல குண்டுகள் வெடித்துள்ளன. நகரின் மத்தியில் அமைந்திருந்த புலனாய்வு அமைச்சகத்தின் முன்பாகவே இந்தக் குண்டுகள் வெடித்தன. இவை மோட்டார் குண்டுத் தாக்குதல்களாக இருக்கலாம் என்று கூறப்பட்டது. இந்தத் தாக்குதல்களுக்கு ஈராக்கைத் தலைமையகமாகக் கொண்டு செயல்படும் மக்கள் முஜாஹிதீன் என்ற அமைப்பு உரிமை கோரியுள்ளது. இந்தக் குண்டு வெடிப்புகளால் தெஹ்ரான் நகரம் அதிர்ந்தது.

உயிரிழப்புக்கள் குறித்தோ; சேதங்கள் பற்றியோ எந்த விவரமும் உடனடியாகத் தெரியவரவில்லை. (ஐ-ஒ)

## ஷெரீப் மற்றும் பெற்றோர் மீது ஊழல் வழக்குகள் தாக்கல்!

இஸ்லாமாபாத், ஜூலை 17

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் மீதும் அவரது பெற்றோர் மீதும் இராணுவ ஆட்சியாளர் ஊழல் வழக்குகளைத் தாக்கல் செய்துள்ளனர்.

பதவியில் இருந்தபோது சுமார் 24 கோடி 70 லட்சம் ருபா பெறுமதியான சொத்து ஒன்றை வாங்கியதற்கு பணம் கிடைத்த வழிகளைத் தெரிவிக்கவில்லை என்று ஷெரீப் மீதான வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

இதே போன்று அவரின் பெற்றோர்கள் சொத்து ஒன்றை வாங்கிய போது அதற்கான வரியைக் கட்டாமல் ஏமாற்றியதாகக் குற்றம் சுமத்தப்பட்டு மற்றொரு வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதற்கிடையில் —

ஷெரீப்பின் ஆதரவாளரான முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரூக் சத்தார் என்பவருக்கு ஊழல் வழக்கில் பாகிஸ்தான் நீதிமன்றம் ஒன்று 14 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்துள்ளது. (ஐ-ஒ)

## மூன்று ஐரோப்பிய நாடுகள் பாக். தூதுவர்களை ஏற்க மறுப்பு

பாகிஸ்தான் நியமித்த தூதுவர்களை ஏற்றுக் கொள்ள 3 ஐரோப்பிய நாடுகள் மறுத்து விட்டன.

சுவீடன், பெல்ஜியம் மற்றும் இத்தாலி ஆகிய நாடுகளில் செயல்பட்டுவரும் தமது நாட்டுத் தூதரகங்களுக்கு புயதி தூதுவர்களை பாகிஸ்தானின் இராணுவ ஆட்சியாளர்கள் நியமித்திருந்தனர்.

ஆனால் இந்தத் தூதுவர்களை ஏற்பதற்கு மூன்று நாடுகளும் மறுத்து விட்டன.

மறுப்புக்கான காரணத்தை மூன்று நாடுகளும் வெளியிடவில்லை.

பாகிஸ்தானில் நவாஸ் ஷெரீபின் அரசு கவிழ்க்கப்பட்டு இராணுவ ஆட்சி ஏற்படுத்தப்பட்டதற்கு தமது அதிருப்தியைக் காட்டவே ஐரோப்பிய நாடுகள் மூன்றும் இத்தகைய மறுப்பைத் தெரிவித்ததாகக் கருதப்படுகிறது. (ஐ-ஒ)

### சியாராலியோன் தீவிரவாதிகளின்

## முற்றுகையில் சிக்கி இருந்த ஐ.நா. படையினர் மீட்பு!

### அதிரடித் தாக்குதல் நடத்தப்பட்டது!!

சியாராலியோனில் புரட்சிகர ஐக்கிய முன்னணித் தீவிரவாதிகளின் முற்றுகையில் சிக்கியிருந்த அமைதிப் படையினர் மற்றும் இராணுவப் பார்வையாளர்கள் ஆகியோர் ஐ.நா. படையினரால் அதிரடி நடவடிக்கை மூலம் மீட்கப்பட்டனர்.

நேற்று முன்தினம் அதிகாலை நேரத்தில் இந்த அதிரடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அப்போது நடந்த மோதல்களில் தீவிரவாதிகள் பலர் கொல்லப்பட்டனர்.

222 இந்திய சமாதானப் படை வீரர்களும், 11 இராணுவப் பார்வையாளர்களும் மீட்கப்பட்டனர். இராணுவப் பார்வையாளர்கள் பிரிட்டிஷ் ஹெலிக்கொப்டர்கள் மூலம் ஐ.நா. அலுவலகத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அமைதிப் படையினர் முகாமிற்குச் சென்றனர்.

ராஜ்ஜிய மற்றும் அரசியல் பேச்சுக்கள் பயனளிக்காத நிலையிலேயே ஐ.நா. படையினர் இந்தத் தாக்குதல் நடவடிக்கையை மேற்கொண்டதாக ஐ.நா. தலைமையகம் கூறியுள்ளது.

தீவிரவாதிகள் மேலும் மேலும் அச்சுறுத்தும் போக்கை மேற்கொண்டதாலும் முற்றுகையில் சிக்கியிருந்தவர்களிடம் உணவுக் கையிருப்பு குறைந்து வந்ததாலும் குறுகிய நேரத் தாக்குதல் நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டதாக ஐ.நா. தலைமையகம் கூறியுள்ளது.

இதற்கிடையில் —

சியாராலியோனின் கிழக்குப் பகுதியில் — தீவிரவாதிகளின் முக்கிய தளம் உள்ள—டாரு நகரைக் கைப்பற்றும் நோக்கில் ஐ.நா. சமாதானப் படையினர் முன்னேறி வருவதாகத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழக மீனவர்களை மீட்க உடனடி நடவடிக்கை தேவை

### மீனவர் சங்கங்கள் கோரிக்கை

இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களை விடுதலை செய்ய மத்திய மாநில அரசுகள் தீவிர நடவடிக்கை எடுக்கக் கோரி தமிழக மீனவர் சங்கங்கள் சென்னையில் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தின.

தற்போது இலங்கைச் சிறையில் 10 தமிழ் மீனவர்கள் அடைத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் இவர்களை விடுவிக்க உடனடியான நடவடிக்கை தேவை என்றும் மீனவர் தலைவர்கள் தெரிவித்தனர்.

இந்திய கடற்படையிடம் இலங்கை மீனவர்கள் பிடிபடும்போதெல்லாம் அந்த நாட்டு அரசின் அதிகாரிகள் நேரில் வந்து அவர்களை விடுவித்து அழைத்துச் செல்கின்றனர்.

ஆனால் இந்திய அதிகாரிகளோ இந்த விடயத்தில் மெத்தனமாக இருந்து வருகின்றனர் என்றும் அந்தத் தலைவர்கள் அதிருப்தி தெரிவித்தனர். (இ-ஒ)

## 182 பேர் பலி!

இந்தியாவில் மகராஷ்டிரா மற்றும் குஜராத் மாநிலங்களில் தொடர்ந்து பெய்து வரும் பருவ மழையினால் இது வரை 182 பேர் உயிரிழந்துள்ளனர்.

பல்வேறு இடங்களில் இடம் பெற்ற நிலச்சரிவுகளில் புதையுண்டு இறந்தவர்களின் உடல்களை மீட்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்த இரு மாநிலங்களிலும் உள்ள ஆறுகளில் நீர்மட்டம் அபாய அளவைத் தாண்டி வருவதாகக் கூறப்படுகிறது. (ஐ-ஒ)

## நேபாளத்தில் 4 பொலீஸார் கொல்லப்பட்டனர்

நேபாளத்தில் தீவிரவாதிகள் காவல் நிலையம் ஒன்றின் மீது நடத்திய தாக்குதலில் 4 பொலீஸார் கொல்லப்பட்டனர்.

சிந்துபான்செளக் மாகாணத்தில் தலைமறைவு மாவோயிசத் தீவிரவாதிகள் இந்தத் தாக்குதலை நடத்தியதாகக் கூறப்படுகிறது.

தாக்குதலில் காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக காத்மண்டுவிற்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர். (ஐ-ஒ)

## பாக். ரயிலில் குண்டு வெடித்தது: 2 குழந்தைகள் உட்பட 9பேர் பலி

இஸ்லாமாபாத், ஜூலை 17

பாகிஸ்தானில் பயணிகள் ரயில் ஒன்றில் குண்டு வெடித்ததால் 3 பெண்கள் மற்றும் 2 குழந்தைகள் உட்பட 9 பேர் உயிரிழந்தனர். மேலும் 25 பயணிகள் படுகாயமடைந்த நிலையில் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நாட்டின் தெற்குப் பகுதியில் உள்ள சிந்துஹைதராபாத் நகரில் இருந்து கராச்சிக்குச் சென்றுகொண்டிருந்த 'மெஹ்ரான் எக்ஸ்பிரஸ்' என்ற பயணிகள் ரயிலிலேயே இந்தக் குண்டு வெடிப்பு நிகழ்ந்துள்ளது. நிலையம் ஒன்றிலில் தரித்துவிட்டு ரயில் புறப்பட்டபோது குண்டு வெடித்துள்ளது.

குண்டு வெடித்ததை அடுத்து எங்கும் அலறல் சத்தம் கேட்டதாகவும், சிதைந்த உடல்களிலிருந்து ரத்தமும், சதையும் சிதறிக்கிடந்ததாகவும் உயிர்தப்பிய பயணி ஒருவர் தெரிவித்தார். (இ-ஒ)

# மரண அறிவித்தல்கள்

## நல்லையா தர்மலிங்கம்

(பெத்தப்பா)

புன்னாலைக்கட்டுவன் வடக்கைச் சேர்ந்த நல்லையா தர்மலிங்கம் (பெத்தப்பா) 16-07-2000 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் சின்னம்மாவின் அன்புக் கணவரும் கதிர்காமநேசன் தர்மறஞ்சினி, ஆகியோரின் தந்தையும் தங்கேஸ்வரி (ஓய்வுபெற்ற ஆசிரியை)யின் சிறியதந்தையும் பகிரதி, பஞ்சாட்சரம், சிவஞானசுந்தரம் ஆகியோரின் மாமனாரும் பர்வதவர்த்தினி, சிறிமுருகதாஸ், காலஞ்சென்ற தேவவர்த்தினி, அருள்முருகன், பிரதீப், சுகந்தினி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17-07-2000) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

தகவல்:
**கதிர்காமநேசன்**
(மகன்)

புன்னாலைக்கட்டுவன் வடக்கு,
புன்னாலைக்கட்டுவன்.

(76446)

## விஜயசிங்கம் சிவபாஸ்கரன்

(ஹொலன் கிளி)

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் ஹொலண்டை வசிப்பிடமாகவும் கொண்ட விஜயசிங்கம் சிவபாஸ்கரன் கொழும்பில் (08 – 07 – 2000) சனிக்கிழமை அன்று அகால மரணமடைந்தார்.

இவர் காலஞ்சென்ற தம்பையா விஜயசிங்கம் (ஓய்வு பெற்ற பொலீஸ் உத்தியோகத்தர்) —சின்னத்தங்கம் ஆகியோரின் அன்பு மகனும், விஜயகுலசிங்கம் (அளவெட்டி), சிவசுப்பிரமணியம் (ஜேர்மனி), வள்ளிநாயகிதேவி (அளவெட்டி), சிவகுமாரன் (கோண்டாவில்), சிவலோகநாயகிதேவி (கனடா), சிவசண்முகநாதன் (உரும்பிராய்) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், இரஞ்சிதமலர், அமிர்தாம்பிகை (ஜேர்மனி), தியாகராசா, ஜெயராணி, ஜெகநாதன் (கனடா), லிங்கேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், விஜயரட்சகன் (யாழ். பல்கலைக் கழக மாணவன்), உமாசங்கர், சுஜமுகன், சிந்துஜா, சிவதர்சினி (ஜேர்மனி ஆகியோரின் சிறிய தகப்பனாரும், யாழினி, கபில்ராஜ், பவதாரணி (கனடா), சுஜாணன் (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், விஜயதுவாரகனின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 16 – 07 - 2000 (ஞாயிற்றுக்கிழமை) கொழும்பில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**வி. சின்னத்தங்கம் (தாய்)**
**வி. சிவசண்முகநாதன் (தம்பி)**
விஜிநா வர்த்தக நிலையம், உரும்பிராய்.

முகவரி:-
முதலாம் ஒழுங்கை,
பலாலி வீதி,
உரும்பிராய்.

(76438)

## திருமதி செல்லம்மா கிட்ணர்

(வரணி)

வரணி வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி செல்லம்மா கிட்ணர் நேற்று (16- 07- 2000) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கிட்ணரின் அன்பு மனைவியும் இரத்தினபூபதி, அம்பிகாநிதி (கட்டடத் திணைக்களம்), கமலேஸ்வரன் (தொழில் நுட்ப உத்தியோகத்தர், யாழ். பல்கலைக்கழகம்), தவகேஸ்வரன் (ஆசிரியர், வரணி இடைக்குறிச்சி ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாசாலை), பரமேஸ்வரன் (ஆசிரியர், கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாசாலை), சிறிசந்திரவதனா, (சமூர்த்தி முகாமையாளர், தென்மராட்சி பிரதேச செயலகம்), அருள்வேந்தன் (ஆசிரிய மாணவன், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை), சிவமஞ்சுளா (நூலக உதவியாளர், வரணி) ஆகியோரின் அன்புத் தாயாரும், பொன்னுத்துரை (பொது வைத்தியசாலை, யாழ்ப்பாணம்), மகேஸ்வரி, விஜயகுமாரி, மனோரஞ்சனி, யோகராசா (பொது வைத்தியசாலை, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் தம்பிப்பிள்ளை, காலஞ்சென்ற முத்துக்குமார், தெய்வானை, செல்லாச்சி, சரஸ்வதி, காலஞ்சென்ற இராசரத்தினம், செல்வராசா (டென்மார்க்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், செந்தூரன், கோகிலன், துளசி, கார்த்திகா துவாரகன், கோபிகா, பூங்குந்தன், முகுந்தன், கீர்த்திகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், தேவராணி, காலஞ்சென்ற ஜெயக்குமாரி, அருமைராணி, கந்தசாமி (அதிபர், மிருசுவில் அரசினர் வித்தியாலயம்) காலஞ்சென்ற பொன்னையா, வைத்திலிங்கம் (அருமைத்துரை), பேபிசரோசா ஆகியோரின் அன்பு மைத்துனியும் காலஞ்சென்ற குழந்தையப்பா பொன்னம்மா தம்பதிகளின் மூத்த புதல்வியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் வரணி வடக்கில் இன்று (17-7-2000) திங்கட்கிழமை பி. ப. 2.00 மணியளவில் இடம்பெறும்.

இந்தத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**கி. அம்பிகாநிதி**
(மகன்)

வரணி வடக்கு,
வரணி.

(76444)

# சமய சந்நிதிகளில்

நெல்லியடி, ஜூலை 17

தென் புலோலி உபயகதிர்காம ஆலயத்தில் கும்பாபிஷேகம் நடைபெற்று மண்டலாபிஷேகம் இடம்பெற்று வருவதனால், இம்முறை வருடாந்த கொடியேற்றம் நிகழவில்லை இதனால் நாளை செவ்வாய்க்கிழமை வழமையான தீர்த்த உற்சவம் நடைபெறாது என அறிவிக்கப்படுகின்றது.

இதே வேளை —

புலோலி மூச்சன்புலோ சிவன் ஆலயத்தில் கடந்த 10 ஆம் திகதி மணவாளக் கோலம் இடம்பெற்று. அன்றே திருவிளையாடற் புராண படனமும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

(ஐ-109)

★ ★ ★

குருநகர் புனித யாகப்பர் ஆலய வருடாந்த திருநாள் கொண்டாட்டம் நேற்று ஆரம்பமாகியது காலை6-30 மணியளவில் ஆலயத்தில் இடம்பெற்ற செபமாலை வழிபாட்டைத் தொடர்ந்து பங்குத்தந்தை வண பிதா பி.எவ். பொணிப்பாஸினால் ஆலயக் கொடி ஏற்றப்பட்டது.

தொடர்ந்து ஒன்பது நாள் மாலை 4-00 மணிக்கு இடம்பெறவுள்ள ஆராதனைகளைத் தொடர்ந்து இம்மாதம் 24ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 4-00 மணிக்கு நற்கருணை ஆராதனையும் மறுநாள் 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 7-30 மணிக்குத் திருநாள் திருப்பலியும் நடைபெறும்

குருநகர் பகுதியிலிருந்து பெரும் எண்ணிக்கையான மக்கள் இடம்பெயர்ந்து வேறு இடங்களில் தற்போது தங்கியுள்ளமையால் நேற்றைய கொடியேற்ற நிகழ்வில் சொற்ப எண்ணிக்கையானோரே கலந்துகொண்டனர்.

(ஐ-51)

★ ★ ★

வலி.வடக்கு, ஜூலை 17

தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்தில் ஆடிச்செவ்வாய்பூசை நாளை நடைபெறவுள்ளது.

(ஐ-86)

★ ★ ★

குருநகர், ஜூலை 17

குருநகர் பாங்ஷால் வீதியில் அமைந்துள்ள புனிதகார்மேல் ஆலயத்தின் வருடாந்த திருவிழாக் கொண்டாட்டம் நேற்றுக் காலை 7-30மணியளவில் இடம்பெற்ற திருவிழாத் திருப்பலியுடனும் அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற கார்மேல் அன்னையின் சொரூப ஆசீருடனும் நிறைவு பெற்றுள்ளது.

திருவிழா திருப்பலி கூட்டுத் திருப்பலியாக யாழ். மறைமாவட்ட குரு முதல்வர் ஏ.பி. செல்வராசா தலைமையில் இடம்பெற்றது.

(ஐ-51)

# தொண்டர் ஆசிரியருக்கு அழைப்பு

தொண்டர் ஆசிரியர் சங்கத்தில் பதிவுகளை மேற்கொண்டு நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியவர்களை இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். நகரில் அமைந்துள்ள டி.எம்.ஐ கல்வி நிலையத்துக்குச் சமுகம் தருமாறு யாழ். மாவட்டத் தொண்டர் ஆசிரியர் சங்கத்தின் தலைவர் கேட்டுள்ளார். (ஐ-8)

# கண்ணீர் அஞ்சலி

## சோமசுந்தரம் சஞ்சீவன்

(உயர்தர கணிதப் பிரிவு மாணவன், யாழ். இந்து)

பொங்கி வரும் துயரினிலே
எம்மையெல்லாம் பொசுக்கிட வைத்து
அவலமாய் மரணித்தீரே
சாதனைகள் பல படைக்கும்
யாழ் இந்துவின் மைந்தனே
உமைக் காலன் துப்பாக்கியாய் வந்து
துப்பாக்கியால் கொன்று விட்டான்
பொழிந்திடும் கண்ணீர் ஆறாய்ப்
பெருகிட துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்கள் உரித்தாகட்டும்.

எமது சக மாணவி சோ. நிலானியின் அண்ணாவின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆண்டு 10 மாணவிகள்,**
**மணி கல்வி நிறுவனம்,**
நாச்சிமார்கோவிலடி.

(76442)

# யாழ். மத்தியின் மைந்தர்கள்

எமது

## துயரத்தைப் பகிர்கின்றோம்

எமது யாழ். மத்திய கல்லூரியில் கல்வி பயின்ற மாணவனும், தற்போது யாழ். இந்துக் கல்லூரியில் உயர்தர வகுப்பில் (2001 கணிதப்பிரிவு) கல்விபயின்று கொண்டிருந்தவருமான

## சோமசுந்தரம் சஞ்சீவன் அவர்களின்

அகால மரணச்செய்தி கேட்டு எமது இதய அஞ்சலியைக் காணிக்கையாக்குவதுடன் அவரை இழந்து துன்புற்றிருக்கும் குடும்பத்தினருக்குயாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் கல்விச்சமூகம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றது.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,**

(76445)

# மரண அறிவித்தல்

## குமாரசுவாமிக் குருக்கள் ஞானச்சந்திர ஐயர்

குமாரசுவாமிக் குருக்கள் ஞானச்சந்திர ஐயர் நேற்று 16-07-2000 கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் பார்வதிஅம்மா அவர்களின் அன்புக் கணவரும் ஜெயமதி, தர்சனி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஸ்ரீகாந்தன் (மதுவரித் திணைக்களம்), சியாம்குமார் (கொமேசல் வங்கி, திருமலை) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று திருமலையில் நடைபெறும்.

தகவல்:
**ந. ஸ்ரீகாந்தன்**
(மருமகன்)
**நாராயணக் குருக்கள்**
(மைத்துனர்)
(கதிரேசன் கோயில், யாழ்ப்பாணம்.)

இல. 11, புதிய சோனக தெரு,
திருகோணமலை.

(76447)

# கலாபூஷண விருது 2000

★★★★★★★★★★★★★★★★★★★★★★




'எப்படி வரைவது?' என்ற ஓவிய நூலாசிரியர், சிரேஷ்ட சித்திர ஆசிரியர், பிரபல ஓவியக் கலைஞர் ஆகிய

**மானிப்பாய் திரு. எஸ். நடராசா**
**எஸ். என். ஆர். அவர்களுக்கு**

இலங்கை அரசினால்

கலாபூஷண விருதும், (ஓவியம்) பணப் பரிசும், சான்றிதழும் வழங்கப்பட்டுள்ளன.

**மானிப்பாய்ப் பிரமுகர்கள்.**

(76490)

உதயன்

## உண்மையைக் கூற முன் வருவார்களா?

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் கணிதப் பிரிவு மாணவன் சோமசுந்தரம் சஞ்சீவனின் படுகொலை யாழ். கல்வி உலகையே உலுப்பியிருக்கின்றது.

இத்தகைய கொடூர சம்பவத்தால் மாணவர்களுக்கு ஏற்பட்ட மனப்புழுக்கம், விசனம் ஆகியவற்றின் விளைவாக நேற்றும் நேற்று முன்தினமும் குடாநாட்டில் தனியார் கல்வி நிறுவனங்கள் இயங்கவில்லை. இறுதி ஊர்வலம் நடைபெறும் இன்றைய தினம் பாடசாலைகளிலும் இதே நிலைமை நிலவக் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கொல்லப்பட்ட மாணவன் கல்வியே கண்ணாகக் கொண்ட ஓர் அப்பாவி என்பதை வடமாகாண அதிபர்கள் சங்கம் வெளியிட்ட அறிக்கை உறுதிப்படுத்துகின்றது. சம்பந்தப்பட்ட மாணவனின் கல்லூரி அதிபரும், கல்லூரிச் சமூகமும், அம்மாணவனின் வதிவிடப் பிரதேச மக்களும் கூட இதையே அடித்துக் கூறுகின்றார்கள்.

ஆனால் படைத்தரப்புத் தகவல்கள் வேறுவிதமாகச் சோடிப்பவையாக அமைந்துள்ளன.

நீதியான - நடுநிலையான - விசாரணைகள் மூலம் உண்மை அம்பலப்படுத்தப்பட வேண்டும்; கொடூரக் குற்றம் இழைத்தவர்கள் தண்டிக்கப்படவேண்டும்; பாதிக்கப்பட்டோருக்கு நீதியும் நிவாரணமும் கிடைக்க வேண்டும். - இதுதான் மாணவர்களினதும் சமூகத்தினதும் இப்போதைய நியாயமான எதிர்பார்ப்பு.

போன உயிர் போனதுதான். ஆனால் அதற்காக குற்றமிழைத்தவர்களும் தப்பிப் போகவிட்டுவிடுவதை அனுமதிக்க முடியாது; அவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டேயாக வேண்டும்.

சட்டரீதியான விசாரணையும் நடவடிக்கையும் எடுக்கப்பட வேண்டும் என்ற சமூகத்தின் எதிர்பார்ப்பு முற்றிலும் நியாயமானது.

"அத்தகைய நீதியான - சுதந்திரமான - சட்ட விசாரணைக்குத் தயார்; முழு ஒத்துழைப்புத் தருவோம்; அதில் தலையிடமாட்டோம்." - என்று படைத்தரப்பில் உறுதி கூறப்பட்டுள்ளது. அது செயலுருப் பெறுமா என்பதுதான் கேள்வி.

அது செயலுருப் பெறவேண்டும் என்றால் நீதியான விசாரணைக்கு படைத்தரப்பு மட்டுமல்லாமல் சம்பந்தப்பட்ட அனைவருமே ஒத்துழைப்புத் தரவேண்டியது அவசியம்.

ஆனால் சிக்கல் அங்கேதான் இருக்கின்றது. இந்தக் கொடூரச் சம்பவம் நடைபெற்றதாகக் கருதப்படும் பிரதேச மக்கள் பொறுப்பாக நடந்தால்தான் உண்மையை வெளிக் கொணர முடியும்; குற்றவாளிகளை அம்பலப்படுத்த முடியும். சமூகத்தின் ஒவ்வொரு அங்கத்தவரும் சமூகப் பொறுப்போடு செயற்படாவிட்டால் இத்தகைய குற்றங்கள் மற்றும் சமூகச் சீரழிவுகளைத் தடுத்து நிறுத்திவிட முடியாது.

சமூகத்தில் ஓர் அப்பாவி மாணவனின் உயிர் அநியாயமாகப் பறிக்கப்பட்டிருக்கின்றது என்றால் அதை நீதியின் முன் கொண்டு வந்து, குற்றவாளிகளுக்குத் தண்டனை வாங்கிக் கொடுப்பதில் சமூகத்தின் ஒவ்வொரு அங்கத்தவருக்கும் பொறுப்பு உண்டு என்பதை சம்பந்தப்பட்டோர் உணர்ந்து உண்மைச் சாட்சியங்களை வெளிப்படுத்த முன்வர வேண்டும். முன்வந்தால் ஓர் அப்பாவியின் அநியாய அழிப்புக்கு உரிய தண்டனையும் நியாயமும் கிட்ட வாய்ப்புண்டு.

முன்வருவார்களா?

# தற்காலிக இடமாற்றத்துக்கு முன் அனுமதி பெற வேண்டும்

## மாகாணக் கல்விப் பணிப்பாளர்

குடாநாட்டில் உள்ள ஐந்து கல்வி வலயங்களிலும் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களை அவசிய தேவையின் காரணமாக தற்காலிகமாக இடமாற்றம் செய்வதாயின் தனது அனுமதியைப் பெற்ற பின்னரே இடமாற்றம் செய்ய முடியும் என்று மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் ச.நா.தணிகாசலம்பிள்ளை வலயப் பணிப்பாளர்களுக்குத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் கடந்த மார்ச் மாதம் 15ஆம் திகதிக்குப் பின்னர் ஒரு வலயத்திலிருந்து வேறொரு வலயத்துக்கு தற்காலிகமாக இடமாற்றம் செய்யப்பட்ட ஆசிரியர்களின் விவரத்தையும் இடமாற்றம் வழங்கப்பட்ட கடிதத்தின் பிரதியையும் - மற்றும் வடக்கு- கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளரது கடிதத்தின் பத்தி 4க்கு அமைவாக - ஆசிரிய இடமாற்ற விண்ணப்பங்களை 4 பிரதிகளில் தமக்கு அனுப்பிவைக்குமாறும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ-10)

# கொழும்பு தினசரிகளை இங்குபெற ஏற்பாடு செய்யுமாறு கோரிக்கை

## பத்திரிகையாளர் சங்கக் கூட்டத்தில்

வடமராட்சி,ஜூலை17

கொழும்பு தினசரிப் பத்திரிகைகள் யாழ்ப்பாணத்தில் கிடைப்பதற்குரிய நடவடிக்கைகளைத் தாமதமின்றி மேற்கொள்ளுமாறு வடஇலங்கைப் பத்திரிகையாளர் சங்கம் கோரி உள்ளது.

ஜனாதிபதி, தகவல் தொடர்பு சாதன ஊடகத்துறை அமைச்சர், பிரதி அமைச்சர், வடபிராந்திய இராணுவத் தளபதி ஆகியோரிடம் இது தொடர்பான கோரிக்கையை முன் வைப்பது என்ற தீர்மானம் சங்கக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

சங்கத் தலைவர் எஸ். கதிர்காமத்தம்பி தலைமையில் இக்கூட்டம் நேற்று முற்பகல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

கடந்த மூன்று மாதகாலமாக கொழும்பு தினசரிகள் யாழ்ப்பாணத்தில் கிடைக்கவில்லை என அத்தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பத்திரிகையாளர்கள் செய்திகளைச் சேகரிக்கச் செல்லும் போது நிறுவனத்தின் நியமனக் கடிதத்தையோ அல்லது நிறுவனத்தால் வழங்கப்படும் அடையாள அட்டையையோ எடுத்துச் செல்ல வேண்டும். அதன் மூலம் தேவையற்ற சிரமங்களை தவிர்த்துக் கொள்ளலாம் எனவும் கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டது. (ஐ-173)

# தமிழ்க் கட்சிகளின் வளர்ச்சி உட்பூசல்களால் சீரழிகிறது

## வீரமக்கள் தின நிகழ்வில் உரை

யாழ்ப்பாணம்,ஜூலை17

உட்கட்சிப் பூசல்களாலும் கட்சிகளுக்கு இடையே நிலவும் பிணக்குகளாலும் ஜனநாயக வழிக்குத் திரும்பியுள்ள தமிழ்க் கட்சிகளின் முன்னேற்றம், வளர்ச்சி போன்றவை தடைப்பட்டுள்ளன.

இவ்வாறு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் யாழ்.பிராந்திய செயலாளர் (சுரேஷ் பிரிவு) எஸ்.மோகன் தெரிவித்தார்.

புளொட் அமைப்பினால் நேற்று நடத்தப்பட்ட வீரமக்கள் தின அஞ்சலி வைபவத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகம் அ.அமிர்தலிங்கம், நாடாளுமன்ற உறுப்பினர் வெ.யோகேஸ்வரன் ஆகியோர் கொல்லப்பட்ட தினமான கடந்த 13 ஆம் திகதி ஆரம்பமான வீரமக்கள் தின இறுதி நாள் நிகழ்வு புளொட் செயலதிபர் க.உமாமகேஸ்வரன் கொல்லப்பட்ட தினமான நேற்று யாழ். நகரிலுள்ள புளொட் அலுவலகத்தில் நடைபெற்றது.

அஞ்சலி நிகழ்வுக்கு முன்னதாக க.உமாமகேஸ்வரனின் உருவப்படத்துக்கு மலரஞ்சலி செலுத்தப்பட்டது. தந்தை செல்வாவின் நினைவுத் தூபி மற்றும் உருவச்சிலைக்கும் மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

மலரஞ்சலியைத் தொடர்ந்து சாவகச்சேரி நகர சபைத் தலைவர் துன்ரன் பொன்னையா தலைமையில் அஞ்சலி உரைகள் இடம்பெற்றன.

ஈ.பி.ஆர்.எல்.எவ். சுரேஷ் பிரிவைச் சேர்ந்த எஸ்.மோகன் மேலும் அங்கு உரையாற்றும் போது கூறியதாவது:-

அரசியல் கட்சிகள் என்ன நோக்கத்துக்காக ஆரம்பிக்கப்பட்டனவோ அந்த நோக்கத்திலிருந்து விலகும்போது அது தொடர்பாக கேள்வி எழுப்புபவர்களை, விமர்சிப்பவர்களை கட்சியிலிருந்து விலக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாலே உட்கட்சிப் பூசல்கள் தோன்றுகின்றன.

விமர்சனம் செய்யும் உரிமை கட்சிகளுக்குள் இருந்தால்தான் கட்சிகளை வளர்க்க முடியும்.

சரிக்கும் பிழைகளுக்குமிடையிலான போராட்டம்தான் வளர்ச்சிக்கு துணையாக இருக்கிறது என்பதனை புரிந்து கொள்ள வேண்டும்.

கட்சிகளுக்கு இடையே நிலவும் முரண்பாடுகள், பூசல்கள் பேசித் தீர்க்கப்பட வேண்டியவை. ஜனநாயக வழிக்குத் திரும்பியுள்ள தமிழ்க் கட்சிகளுக்கிடையில் இந்த ஒற்றுமை இருக்கவேண்டும்.

தமிழ்க் கட்சிகளின் ஒற்றுமை பற்றி கூட்டங்களில் மட்டும் பேசி வருகிறோம். ஆனால் ஐக்கியம் தொடர்பாக நடைமுறையில் எமது செயற்பாடுகள் போதுமானவையல்ல.

1998 ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ்க் கட்சிகள் ஒன்றாக போட்டியிட முயன்றும் முடியவில்லை. அதனால் தனித்தனியே போட்டியிட வேண்டிய நிலை ஏற்பட்டது.

நாம் ஒன்றாக போட்டியிட்டு வெற்றிபெற்றிருந்தால் உள்ளூராட்சி சபைகள் மூலம் நாங்கள் பலவற்றைச் சாதித்திருக்க முடியும்.

இப்படி அவர் கூறினார்.

ஓட்டோ சங்கத்தின் செயலாளர் எஸ்.தர்மராசா உரையாற்றும் போது கூறியதாவது:-

சுதந்திரத்துக்காக போராடப் புறப்பட்ட இளைஞர்களை தீய சக்திகள் பிரித்து வைத்தன. அண்மையில் கொல்லப்பட்ட யாழ்.இந்துக் கல்லூரி மாணவன் சஞ்சீவனின் கொலையை தமிழ்க் கட்சிகள் எவையும் கண்டனம் தெரிவிக்கவில்லை - என்றும் கூறினார்.

யாழ்.மாநகர சபை உறுப்பினர்களான எம். கண்ணன், ஆர். ஜெயச்சந்திரன், சிறீலங்கா சுதந்திரக் கட்சிப் பிரமுகர் எஸ். பேரின்பநாயகம் போன்றோரும் உரையாற்றினார்கள். (ஐ-5)

**உதயவாக்கு**

தனக்குத் தெரிந்த விஷயங்களை மட்டுமே மனிதன் பேச ஆரம்பித்தால், உலகில் பூரண அமைதி நிலவும்.

- பெர்னாட்ஷா

# வாசகர் உள்ளம்

## உண்மை வென்றது

நாற்பத்தைந்து நாள்கள்  
நாம் நரகத்தில் வாழ்ந்திருந்தோம்....  
உண்மையை மறைப்பவர்  
உபதேசம் படித்திருந்தோம்  
சர்க்கரைக்குப் பதிலாய் நாம்  
இலுப்பைப்பூ சுவைத்திருந்தோம்  
உதயன் உதிக்காமல் நாம்  
இருளில் தத்தளித்தோம்.  
இரவு பகல் உணராமல்  
குருடர்கள் போல் நாமிருந்தோம்  
விரால் மீன் இல்லாமல் - குறவைமீன்  
துள்ளிக்குதித்து அதிகாரம் செய்தது.  
சேவல்கள் சில கங்கணம் கட்டின  
"நாம் கூவாமல் சூரியன் எங்ஙனம்  
உதிக்கும் ஆதலால் நாம் கூவப்போவதில்லை"  
உண்மை வெளிச்சம் விரும்பும் அனைவரும்  
கண்களை மூடிக் கடவுளை வேண்டினர்  
"உதயன் மீண்டும் உதிக்க வேண்டும்  
உண்மை வெளிச்சம் பரவவேண்டும்"  
இறுதியாக வேண்டுதல் பலித்தது.  
உண்மை வென்றது கங்கணம் கட்டிய  
சேவல்கள் வெட்கிக் குனிந்தன.  
உதயன் மீண்டும் புதுப் பொலிவோடு  
உதித்து விட்டான்.

- இளம்பரிதி

## அரிய கருத்துக்களை விதைப்பதாக!

*'வில்லேர் உழவர் பகை கொளினுங் கொள்ளற்க சொல்லே ருழவர் பகை'* - வள்ளுவம்

சொல்லேர்கள் (சொல் + ஏர்கள்) இருவகை. ஒன்று வாய்ச்சொல் ஏர். இது காற்று வெளியில் உழுது கணத்தில் பயனற்றுப் போகலாம்.

மற்றது எழுத்து ஏர். இது வாசகர்தம் மனவயல்களை உழுது, கருத்துக்களை உறுதியாக விதைத்துச் செய்கை (Action) என்ற நற்பயிர்தரும்.

'உதயனாகி'ய சொல்லேர் அதனை உழுவோரால் ஆழ உழப்பட்டு அரிய கருத்துக்களை விதைப்பதாக! வாழ்க!

- சொக்கன்

## நீடூழி வாழ்க

உதயன் பத்திரிகை மீண்டும் வெளிவருவதையிட்டு 'நியந்த்ரீ' மகிழ்வடைகிறான். மக்கள் மத்தியில் சமய, சமூக சிந்தனைகளை வளர்ப்பதில் உதயனின் பங்கு அளப்பரியது. விசேடமாக புனித நாள்களில் நற்சிந்தனையும் நல்ல கட்டுரையும் வரைவதோடு, சமூக சீர்கேடுகளையும் சுட்டிக் காட்டி மக்களை விழிப்படைய செய்வதில் உதயன் மிகுந்த சிந்தனையுடன் பாடுபட்டு வருகின்றது. யாழ்ப்பாணத்தில் எங்கே, என்ன நடக்கிறது என்பதை மட்டுமல்லாது எப்படி நடக்கின்றது, அது எப்படி நடந்தால் மக்களுக்கு சேவையாக அமையும் என்பதை வெளிப்படுத்தியும் செய்தி வழங்குவதில் உதயன் துணிச்சலான பத்திரிகையே என்பதில் சந்தேகமில்லை. கிரகணங்கள் வருடத்தில் ஓரிரு மணிநேரம் வருவதால் ஆதவன் மறைந்துவிடுவதில்லை. அதுபோல் உதயனும்நீடூழி வாழும் என வாழ்த்துகின்றான் 'நியந்த்ரீ'

- 'நியந்த்ரீ'

*சரித்திரம் படைக்க வா......*

விடியலின் வரவில் உனை  
விளக்காய் நாம் நினைத்தோம்

விருதுகள் பல பெற்று  
வியக்க வைத்தாய்

விஷமிகள் செய்த சதியால்  
விலாசம் இன்றி போவாயென்று

வில்லங்கமாய் உனக்கு - தடை  
விலங்கும் போட்டார்கள்......

பிரமிக்க நீ மீண்டும் வந்தாய்  
தமிழ் மண்ணில் சரித்திரம் படைக்க.

*அன்பு சால் வாசகப் பிரியன*  
நாகமணி மகேந்திரலிங்கம்.

## மக்கள் வெளியேறியதால்

# ஆலயத்தில் ஏற்றப்பட்ட கொடி இன்னமும் இறக்கப்படவில்லை!

அரியாலை,ஜூலை17

கொழும்புத்துறை 'மேற்கு விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் தற்போதைய யுத்த சூழ்நிலை காரணமாகத் தடைப்பட்டுள்ளது.

மஹோற்சவத்துக்கான கொடி ஏற்றப்பட்டு இரண்டாம் நாள் இப்பகுதியில் இருந்து மக்கள் வெளியேறிவிட்டதால் உற்சவம் தடைப்பட்டுள்ளது. கொடித் தம்பத்தில் ஏற்றப்பட்ட கொடிச் சேலையை உரிய முறைப்படி இறக்கி மஹோற்சவத்தை நிறைவு செய்ய தற்போது முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்தனர்.

குடாநாட்டில் ஏற்பட்ட போர் நிலைமையினால் இது போன்று பல ஆலயங்களின் உற்சவங்களும் நாளாந்தக் கிரியைகளும் தடைப்பட்டுள்ளன. (ஐ-17)

**நாளை**

ஆடி 3

செவ்வாய்க்கிழமை

*திதி:* துதியை  
முன் இரவு 11.45 வரை.  
*நட்சத்திரம்:* திருவோணம்  
பிற்பகல் 5.31 வரை.  
*சுபநேரம்:* 10.31 - 12.01  
*ராகுகாலம்:* 3.01 - 4.31  
(இவை பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

# வடக்கு களமுனையில் எந்நேரமும் பெரும் மோதல்கள் வெடிக்கலாம்

**யாழ்ப்பாணத்துக்குள் ஊடுருவிய விடுதலைப் புலிகள் தொடர்ந்தும் அரியாலை, கொழும்புத்துறை, சாவகச்சேரிப் பகுதிகளில் நிலைகொண்டிருப்பதாக விசேட தகவல் மையத்தின் தகவல்கள் சாட்சி பகர்கின்றன. வடபகுதி போர்க்கள நிலைமைகள் குறித்து கமல் லியனாராச்சி இம்மாத முற்பகுதியில் 'யுக்திய' சிங்கள வார இதழில் எழுதிய கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

யாழ்ப்பாண வர்த்தகர்களால் வியாபாரத்துக்கென கொண்டு செல்லப்பட்ட உணவுப் பொருள்கள், யாழ். பல்கலைக் கழகத்தின் தேவைக்கான கணனிகள் போன்ற கோடிக்கணக்கான ரூபா மதிப்புள்ள பொருள்களை ஏற்றிக் கொண்டு கடந்த மாதம் 21 ஆம் திகதி "உஹண" என்ற கப்பலகொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்பட்டது.

இந்தக் கப்பல் கடந்த மாதம் 26 ஆம் திகதி அதிகாலை பருத்தித்துறையை அண்டிய ஆழ் கடலில் சென்று கொண்டிருந்த வேளையில் விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகி மூழ்கியது. அந்தக் கப்பலில் பணிபுரிந்த 28 பணியாளர்களில் 21 பேர் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த கடற்படையினரால் காப்பாற்றப்பட்டனர் எனவும், அங்கு கடமையில் ஈடுபட்டிருந்த 4 கடற்படையினர் கொல்லப்பட்டனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. வெடிப்பொருள்கள் நிரப்பப்பட்ட விடுதலைப்புலிகளின் அதிவேகப் படகு கப்பலுடன் மோதியதால் கப்பல் வெடித்து மூழ்கியது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

### உதவ வந்த தாக்குதல் படகு

கப்பல் வெடித்ததைத் தொடர்ந்து காங்கேசன்துறை மற்றும் பருத்தித்துறைப் பகுதிகளில் இருந்து கடற்படையினரின் அதிவேகத் தாக்குதல் படகுகள் சம்பவ இடத்துக்கு வந்த வேளை "உஹண" கப்பல் மூழ்கிக்கொண்டிருந்தது.

அவ்வேளையில் அப்பகுதியில் காணப்பட்ட விடுதலைப்புலிகளின் தாக்குதல் படகுகளில் இருந்து கடற்புலிகள் கடற்படையினரின் தாக்குதல் படகுகள் மீது தாக்குதல் மேற்கொண்டதைத் தொடர்ந்து ஏற்பட்ட மோதல்கள் சுமார் அரை மணித்தியாலங்கள் நீடித்தன. தாக்கி மூழ்கடிக்கப்பட்ட "உஹண" கப்பலானது தற்போதைய பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசின் ஆட்சிக் காலத்தில் விடுதலைப் புலிகளால் அழிக்கப்பட்ட ஏழாவது கப்பலாகும்.

தற்போதைய அரசின் ஆட்சிக் காலத்தில் விடுதலைப் புலிகளால் அழிக்கப்பட்ட இரண்டாவது வர்த்தகக் கப்பல் இதுவாகும். இவ்வாறு விடுதலைப் புலிகளால் அழிக்கப்பட்ட முதலாவது வர்த்தகக் கப்பல் "பிறின்சஸ் காஷ்" என்ற கப்பலாகும். இக்கப்பல் 1998 செப்டம்பர் மாதத்தில் முல்லைத்தீவுக் கடற்பரப்பில் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டு பின்னர் அழிக்கப்பட்டது.

### செஞ்சிலுவைக் கொடி பயன்படுத்தப்படாத பின்

இற்றைக்கு சில ஆண்டுகளுக்கு முன்னர் வரை பொதுமக்களுக்குத் தேவையான உணவு மற்றும் அத்தியாவசியப்பொருள்களை கடல்வழியாக எடுத்துச் செல்ல கப்பல்கள் பயன்படுத்தப்பட்டன. அந்தக் கப்பல்கள் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கொடியுடனேயே பொருள்களை எடுத்துச் சென்றன. பின்னர் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவுக்கும் அரசுக்கும் இடையே ஏற்பட்ட ஏதோ கருத்து வேற்றுமையைத் தொடர்ந்து செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் அனுசரணையுடன் இவ்வாறான கப்பல் சேவைகள் மேற்கொள்ளப்படுவது நிறுத்தப்பட்டது. அன்றிலிருந்து இவ்வாறான கப்பல்களின் போக்குவரத்து கடற்படையினரின் பாதுகாப்புடனேயே மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

எவ்வாறாயினும் "மோர்கன்டையில் சிப்பிங்" நிறுவனத்துக்குச் சொந்தமான "உஹண" கப்பல் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதல் தொடர்பாக அந்த அமைப்பு லண்டனில் இருந்து வெளியிட்ட அறிக்கையில் வேறு விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதாவது பொதுமக்களுக்குத் தேவையான பொருள்களை எடுத்துச் சென்ற இந்தக் கப்பலில் ஆயுதங்களும் அவற்றுக்குத் தேவையான ரவைகளும் எடுத்துச் செல்லப்பட்ட காரணத்தினாலேயே இந்தக் கப்பல் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது என்று அந்த அறிக்கை கூறுகின்றது.

இருப்பினும் நம்பிக்கையான வட்டாரங்களின் தகவல்கள் இந்தக் கப்பலில் யுத்த உபகரணங்கள் எவையும் எடுத்துச் செல்லப்படவில்லை எனத் தெரிவிக்கின்றன. தவறுதலாக மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் என்பதை மூடிமறைக்கவே விடுதலைப் புலிகள் இவ்வாறு தெரிவித்துள்ளனர் என்பது பல அரசியல் மற்றும் யுத்தம் தொடர்பான விமர்சகர்களின் கருத்தாகும்.

### யாழ். போர்க்களத்தில் நீறுபூத்த நெருப்பு

கடந்த மாதம் 26 ஆம் திகதி அதிகாலையில் பருத்தித்துறை கடற்பரப்பில் இச்சம்பவம் இடம்பெற்ற வேளையில் தரைப்பரப்பில் நிலைமை சகஜமாகவே இருந்தது. இதற்குச் சில வாரங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் இருந்த போர் கெடுபிடிகள் தற்போது தணிந்து நீறுபூத்த நெருப்பு போல் உள்ளன. ஒரு சில இடங்களில் குறிப்பிட்ட இடங்களில் முன்னணிப் பாதுகாப்பு அரண்கள் மீது மேற்கொள்ளப்படும் மட்டுப்படுத்தப்பட்ட தாக்குதல்கள் மற்றும் இருதரப்பாருக்கும் இடையே நடைபெற்று வரும் ஆட்லறி தாக்குதல் தவிர தரைப்பரப்பில் யுத்தம் மட்டுப்படுத்தப்பட்ட நிலையிலே உள்ளது.

எதிர்வரும் நாள்களில் மேற்கொள்ளப்படவிருக்கும் அரசியல் காய் நகர்த்தலுக்காகவே இந்த அமைதி நிலை பேணப்படுகின்றது என்ற நியாயமான சந்தேகம் அரசியல் வட்டாரங்களில் நிலவுகின்றது.

ஆனால் வடபகுதித் தகவல்கள் படையினரும் விடுதலைப் புலிகளும் தற்போது போருக்கான தயார் முயற்சிகளை மேற்கொள்வதாக தெரிவிக்கின்றன.

### வடக்கிலும் தெற்கிலும் காப்பரண்கள்

நிலைமை இவ்வாறாயின் யுத்தத்தின் போக்கு எவ்வாறு அமையும்?

சில நாள்களுக்கு முன்னர் நவீன ஆயுதங்களைப் பயன்படுத்தி விடுதலைப் புலிகள் மீது மேற்கொண்ட தாக்குதலினால் பயன் ஏதும் கிட்டினவா? யாழ்ப்பாணத்துக்குள் ஊடுருவிய விடுதலைப்புலிகள் தொடர்ந்தும் யாழ்ப்பாணத்துக்குள்ளேயா இருக்கிறார்கள்? பலாலி மற்றும் காங்கேசன்துறை ஆகிய இடங்கள் தொடர்ந்தும் அச்சுறுத்தலுக்கு உட்பட்டுள்ளனவா? போன்ற பல கேள்விகள் கேட்கப்பட்டிருக்கின்றன. யாழ்ப்பாணத்துக்குள் ஊடுருவிய விடுதலைப் புலிகள் தொடர்ந்தும் கொழும்புத்துறை, அரியாலை, சாவகச்சேரிப் பகுதிகளில் இருப்பதாக விசேட தகவல் மையத்தின் தகவல்கள் சாட்சி பகர்கின்றன.

மேலும் வடமராட்சியில் நாகர் கோயில் பகுதியின் வடபுறத்தில் படையினரும் தென்புறத்தில் விடுதலைப் புலிகளும் காப்பரண்களை அமைத்து நிலைகொண்டுள்ளனர் என வடபகுதி தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொழும்புத்துறை, அரியாலை, மற்றும் சாவகச்சேரி பகுதிகளிலும் வடக்கில் படையினரும் தெற்கில் விடுதலைப்புலிகளும் நிலைகொண்டிருக்கின்றனர்.

### பலாலி மீதான அச்சுறுத்தல் குறைந்துள்ளது

இதற்கிடையில் பலாலி விமானப்படை முகாம் பக்கமாகவும் காங்கேசன்துறையில் உள்ள கடற்படை முகாம் பக்கமாகவும் சுமார் இரு வாரங்களுக்கு முன்னர் நிலவிய அச்சுறுத்தல் நிலைமையில் தற்போது மாற்றம் ஏற்பட்டுள்ளது. பல்குழல் எறிகணை தாக்குதலே இதற்கு காரணம் என வடபகுதி இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

விடுதலைப் புலிகளின் ஆட்லறிகளை பின்புறமாக வாபஸ் பெறச் செய்தும் அவற்றை ஒளித்து - மறைத்து - வைக்கும் அளவுக்கு பல்குழல் எறிகணையின் தாக்குதல்கள் அமைந்துள்ளன என்று அந்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

**தமிழில்:-கஜனி**

இத்தகவல்களின்படி காங்கேசன்துறை, பலாலி ஆகிய இரு இடங்களும் இதுவரை எதிர்கொண்ட திடீர் அச்சுறுத்தல் நிலைமையில் இருந்து விடுபட்டுள்ளன. இருப்பினும் இருதரப்பாரினதும் அதிஉயர் சூட்டு வலு (FIRE POWER) காரணமாக முன்னணி காப்பரண்களை முன்நகர்த்த முடியாத நிலை உருவாகியுள்ளது. சரசாலை மோதல்களின்போது இது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக வடபகுதிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவ்வாறாக வடபகுதி போர்க்களமானது அடுத்து ஒரு பெரும் மோதலுக்கான ஆயத்தங்களை மேற்கொள்வதாக அமைந்துள்ளது. எந்த நேரத்திலும் பெரிய மோதல் ஒன்று வெடிப்பது தவிர்க்கமுடியாததாகும். இதற்கு இருதரப்பும் தயார். முன்னோக்கி தாக்குதலை ஆரம்பிக்கும் தரப்பினர் தமது எதிரிகள் தயார் நிலையில் உள்ளனர் எனத் தெரிந்தே தாக்குதலை முன்னெடுக்கும் நிலையில் உள்ளனர். தாம் மேற்கொள்ளும் தந்திரோபாயங்களுக்கு மாற்றீடான தந்திரோபாயங்களை எதிரி மேற்கொள்வான் என்பதை தாக்குதலை ஆரம்பிப்பவர் அறிந்து கொள்ள வேண்டும். எனவேதான் தாக்குதல் குறித்து திட்டமிடுவதே கடினமானதாகும்; அதேவேளை அது பயங்கரமானதும் ஆகும். ★

---

**ஜரிஸ் இராணுவம் போன்று**

# புலிகள் விட்டுக்கொடுத்தால் சமாதானம் ஏற்பட வாய்ப்பு

### பிரிட்டிஷ் ராஜாங்க அமைச்சர்

கொழும்பு,ஜூலை17

வட அயர்லாந்தில் ஐரிஸ் விடுதலை இராணுவம் மேற்கொண்ட போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவர எடுக்கப்பட்ட முயற்சிகளுக்குப் பல முட்டுக்கட்டைகள் ஏற்பட்ட போதும் அவர்கள் சில விடயங்களில் விட்டுக் கொடுத்ததால் சமாதானம் எட்டப்பட்டது; அதேபோல இலங்கையிலும் விடுதலைப்புலிகளும் விட்டுக் கொடுத்தால் சமாதானம் ஏற்பட வாய்ப்பு ஏற்படும்.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட பிரிட்டிஷ் வெளிவிவகார ராஜாங்க அமைச்சர் பீற்றர் வெஸ் மகெட் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டார்.

கடந்த வெள்ளியன்று பிரிட்டிஷ் தூதர் இல்லத்தில் நடந்த விருந்துபசாரத்தில் பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

பல அரசியல் கட்சிப்பிரமுகர்களும் அதில் கலந்து கொண்டனர். அரசும் - புலிகள் தரப்பும் எந்த வகையில் பேசப் போகின்றனர் என்பதைக் கண்டறிவதும் அதற்குப் பிரிட்டன் எந்த வகையில் உதவப்போகின்றது என்பதை அறிவதுமே தனது விஜயத்தின் நோக்கம் என்று அவர் கூறியதாக எதிரணி நாடாளுமன்றப் பிரமுகர் ஒருவர் தகவல் வெளியிட்டார்.

அரசு எதையாவது செய்ய முற்படும் போது அதற்கு ஏற்ற வகையில் புலிகளும் ஒத்துழைக்க வேண்டியது அவசியம். பதவியில் உள்ள அரசு மக்களின் சட்டவாக்கத்தைக் கொண்டது. ஆனால் புலிகள் எந்த விதத்திலும் சட்டபூர்வமான அமைப்பாகக் காணப்படவில்லை.

"எனவேதான் அரசின் முயற்சிகளுக்கு ஏற்றவிதத்தில் புலிகளும் எதையாவது செய்யவேண்டும் என எதிர்பார்க்கிறோம்" - என்று அவர் கூறியதாக அந்த எதிரணிப் பிரமுகர் மேலும் சொன்னார். (ஐ-3)

---

**முடிவை மறுபரிசீலனை செய்ய**

# முஸ்லிம் காங்கிரஸ் வார இறுதியில் கூடும்

கொழும்பு,ஜூலை17

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தனித்துப் போட்டியிடுவது என்று எடுத்த முடிவை மறுபரிசீலனை செய்வது தொடர்பாக ஆராய்வதற்காக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இவ்வார இறுதியில் கூடவிருக்கிறது.

வெளிநாடு சென்றுள்ள கட்சியின் தலைவரும், அமைச்சருமான எம்.எச்.எம். அஷ்ரப் நாளை நாடு திரும்புகிறார்.

அதன்பின்னர் கூட்டம் நடக்கும் திகதி அறிவிக்கப்படவிருக்கின்றது என்று அந்தக்கட்சிப் பிரமுகர் ஒருவர் தகவல் வெளியிட்டார்.

தேர்தலில் தனித்துப் போட்டியிடுவதாக அந்தக் கட்சி எடுத்த முடிவை மறுபரிசீலனை செய்யுமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அந்தக் கட்சியின் செயலாளர் ரவூப் ஹக்கீமை அழைத்துப் பேசியதை அடுத்தே இந்தக் கூட்டத்துக்கு ஏற்பாடாகியுள்ளது. (ஐ-3)

---

**தீர்வுத்திட்டத்தை சமர்ப்பித்தாலும்**

# மூன்றில் இரண்டு பெரும்பான்மை அரசுக்குக் கிட்டுவது மிகக் கடினம்

கொழும்பு,ஜூலை17

உத்தேசத் தீர்வுத்திட்டத்தை அரசு நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தாலும் தற்போதைய நிலையில் அதற்குச் சார்பாக நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களின் ஆதரவை அரசுத் தரப்பால் திரட்ட முடியாமல் போகும் என்று கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இ.தொ.கா., ரெலோ, தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியவை தீர்வு யோசனைகளை நிராகரித்திருப்பதாலும் -

புதிய அரசமைப்புச் சீர்திருத்தத்தில் நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சிமுறை உடனடியாக நீக்கப்படுவது அமையாவிட்டால் அதனை ஐ.தே. கட்சி நிச்சயம் நிராகரிக்கும் என்பதாலும் -

அரசு மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களின் ஆதரவைப் பெறுவது துர்லபமே என்று அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

ஈ.பி.டி.பி., புளொட், ஐ.தே. கட்சியின் அதிருப்திக்குழு ஆகியவற்றின் ஆதரவு கிட்டினாலும் 225உறுப்பினர்களைக் கொண்ட நாடாளுமன்றில் இப்போதைய நிலையில் ஆகக் கூடியது 135 பேரின் ஆதரவையே அரசால் திரட்ட முடியும் என்று கூறப்படுகின்றது.

மூன்றில் இருபங்கினரது ஆதரவை உறுதிப்படுத்த ஆகக் குறைந்தது 150 எம்.பிக்களின் ஒப்புதலை அரசு பெறவேண்டியிருக்கும். (உ)

---

### ஆலயத்தில் பணம், நகை திருட்டு

நெல்லியடி,ஜூலை17

பூட்டிய நிலையிலிருந்த சங்கத்தானைப் பிள்ளையார் கோவில் கதவைப் பிரித்து அங்கிருந்து 2 லட்சத்து 28 ஆயிரம் ரூபா பெறுமதியான நகை, பணம் போன்றவை திருடப்பட்டிருப்பதாக, கோவில் தர்மகர்த்தாவினால் கொடிகாமம் பொலீஸ் நிலையத்தில் புகாரிடப்பட்டுள்ளது.

மே 20ஆம் திகதிக்கும், ஜூன் 10ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலப்பகுதியிலேயே இத்திருட்டுச் சம்பவம் இடம்பெற்றிருப்பதனால் - குறித்த விடயம் தொடர்பாக, சந்தேக நபர் எவர் என தெரியாத நிலை உள்ளதால் - பொலீஸ் விசாரணைகள் தொடர்ந்து நடைபெறுகின்ற வகையில், சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றம் இவ்வழக்கு விசாரணையை ஓகஸ்ட் மாதம் 25ஆம் திகதிக்கு பிற்போட்டுள்ளது. (ஐ-109)

# தமிழ்ப் பத்திரிகையாளர்கள் மீதான நெருக்கடி

கடந்த 9ஆம் திகதிய 'ஆதவன்' வார இதழில் 'செந்தணலோன்' எழுதிய கட்டுரை இது.

சிங்கள பௌத்த பேரினவாதப் போக்குகள் இந்நாட்டின் சகல சமூகங்களினதும் ஐக்கியத்தையும் இருப்பையும் சீர்குலைத்து மனிதப்பேரழிவொன்றை உருவாக்க பிரதான காரணியாக விளங்கும் உள்நாட்டு யுத்த மோதல்களால் தினமும் சாகடிக்கப்பட்டுக் கொண்டிருப்பது உயிரழிவுகள் மட்டுமல்ல; இந்த நாட்டின் "உண்மை" நிகழ்வுகளுமேயாகும்.

அதிகார வெறித்தனங்களும் - அதைத் தொடர்ச்சியாக தக்கவைத்துக் கொள்வதற்கான தந்திரோபாயமாக பேரினவாத ஆட்சியாளர்களால் கைக்கொள்ளப்பட்டு வந்த சிறுபான்மைச்சமூகங்களுக்கெதிரான ஒடுக்குமுறைகளை மேலும் தொடரவும் நீண்டகால யுத்த நடவடிக்கைகளின் போது போரில் ஈடுபடும் படையினரால் மேற்கொள்ளப்படும் மனிதப்படுகொலைகள், பாலியல் வன்முறைகள், அகதிகளின் பெருக்கம், இடப்பெயர்வுகள் என்பவற்றை மூடி மறைக்கவும் தேசிய பாதுகாப்புக்கு குந்தகம் என்ற போர்வையில் செய்தி ஊடகங்கள் மீதான தணிக்கை இந்த நாட்டுக்கு புதியதொரு விடயமல்ல.

கடந்தகால ஐக்கிய தேசிய கட்சிக்கும், இன்றைய பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும் தமது அரசியல் சுயநலன்களை தக்கவைத்துக் கொள்வதற்கான ஒரு பிழைப்புவாத நடவடிக்கையே தணிக்கையாகும்.

ஐக்கிய தேசியக் கட்சி அரசும், இன்றைய பொதுஜன ஐக்கிய முன்னணி அரசும் இன ஒடுக்குமுறைக்கு எதிரான யுத்த நடவடிக்கைகளுக்கு மாத்திரமின்றி தமது ஆட்சிக் காலத்தில் மேற்கொள்ளப்படும் ஊழல் நடவடிக்கைகளையும், பழிவாங்கல்களையும் மூடி மறைப்பதற்கும் கூட ஊடகங்கள் மீதான தணிக்கையை பெருமளவில் பயன்படுத்திக் கொண்டமையானது இந்த நாட்டில் மூடி மறைக்கப்பட முடியாத உண்மை நிலைவரம் ஆகும்.

கடந்த 3 மாதங்களுக்கு முன்னர் யாழ். குடா நாட்டை நோக்கிய விடுதலைப் புலிகளின் பெருமெடுப்பிலான ஓயாத அலைகள் - 3 தாக்குதல் நடவடிக்கையினை அடுத்து பெரு வீழ்ச்சி கண்ட குடாநாட்டின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த ஆனையிறவு படைத்தளம் மீதான வீழ்ச்சியும் -

யாழ்.மாநகரசபை எல்லை வரையான விடுதலைப்புலிகளின நகர்வும் -

இதனையடுத்து தென்மராட்சி பகுதியில் உள்ள பல மினி இராணுவ முகாம்களின் வீழ்ச்சியும் -

அதையடுத்து ஏற்பட்ட நெருக்கடி நிலைமையும் -

சர்வதேச மற்றும் உள்நாட்டு செய்தி ஊடகங்கள் மீது கடுமையான தணிக்கை அமுலுக்கு கொண்டு வரக் காரணமாயிற்று.

இக் காலகட்டத்தில் யாழ். குடாநாட்டில் விடுதலைப் புலிகளுக்கும் அரச படைகளுக்கும் இடையே தென்மராட்சியில் இடம்பெற்ற மோதல் நடவடிக்கைகளின் போது இடம்பெற்ற மனித அவலங்கள் தணிக்கைக்குள் அமிழ்ந்துபோயின.

தென்மராட்சியில் இருந்து ஆயிரக்கணக்கான குடும்பங்கள் வலிமேற்கு, வடமராட்சி, தீவுப்பகுதிகளுக்கும் மற்றும், விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கும் இடம் பெயர்ந்துள்ளன. இதில் 5000 குடும்பங்கள் பூநகரிப் பகுதியில் தற்காலிகமாக தங்க வைக்கப்பட்டுள்ளன.

இவற்றையெல்லாம் விட இந்த மோதல் நடவடிக்கைகளின் போது மட்டுவில் பகுதியில் மட்டும் 500க்கு மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டும் அதே அளவு பொதுமக்கள் படுகாயமடைந்தும் உள்ளனர் என கடந்த மே 8ஆம் திகதி மன்னார் ஆயர் வண.பிதா இராயப்பு ஜோசப் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

இந்த மோதல் நடவடிக்கையின் போது தென்மராட்சிப்பகுதியில் காயமடைந்த நூற்றுக்கணக்கான பொதுமக்கள் மல்லாவி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, ஆபத்தான நிலையில் இருந்த 30க்கு மேற்பட்டோர் M.S.F. சர்வதேச மருத்துவ தொண்டர் நிறுவனத்தினால் வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டனர்.

இவ்வாறான உண்மைச் சம்பவங்கள் மட்டுமல்ல போரில் ஈடுபடும் இருதரப்பினரது இழப்புகள், கைதுகள், காணாமல்போதல் உட்பட பல்வேறு நிகழ்வுகள் தணிக்கைக்குள் அமுக்கப்படுகின்றன.

தணிக்கையைக் காரணங்காட்டி யாழ்.குடாநாட்டில் இருந்து வெளிவந்த 'உதயன்' பத்திரிகை சீல் வைத்து மூடப்பட்டதையடுத்து, தலைநகர் கொழும்பில் இருந்து வெளிவந்த - ஆட்சியாளருக்கு கடும் நெருக்குதலைக் கொடுத்து வந்த 'சண்டே லீடர்', 'இரிதா பெரமுனை' பத்திரிகைகளும் சீல் வைத்து மூடப்பட்டன.

இதனை ஆட்சேபித்து சண்டே லீடர், இரிதா பெரமுனை பத்திரிகையை வெளியிடும் லீடர் பப்ளிக்கேஷன் நிறுவனத்தினர் உயர் நீதிமன்றில் தாக்கல் செய்த மனு விசாரணைக்கு எடுக்கப்பட்டு கடந்த 30ஆம் திகதி வெள்ளிக்கிழமை அரசாங்கம் அமுல்படுத்திய செய்தித் தணிக்கை சட்டரீதியற்றதென உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. ஒருலட்சம் ரூபா நஷ்டஈடு வழங்குமாறு உத்தரவிட்டதுடன் லீடர் நிறுவனம் மீதான தடையும் நீக்கப்பட்டது.

இதேவேளை நாட்டின் அதிஉயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு வழங்கப்பட்டு இரு நாள்களின் பின்னர் மீண்டும் ஜனாதிபதியினால் 3ஆம் திகதி திங்கட்கிழமை முதல் விசேட அதிகாரங்களின் கீழ் புதிய தணிக்கை விதி கொண்டுவரப்பட்டுள்ளது. இதன் மூலம் யுத்த செய்திகளை - நாட்டின் தேசிய நலனுக்கு குந்தகம் விளைவிக்கும் செய்திகள் என அரசு கருதும் செய்திகளை - மீண்டும் தணிக்கை விதிகள் கட்டுப்படுத்தும். அதே நேரம் கடந்த மாதம் கட்டுப்பாடு தளர்த்தப்பட்ட சர்வதேச செய்தியாளர்கள் மீது மீண்டும் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை புதிய தணிக்கை விதிகள் விசேட அதிகாரத்தின் கீழ் அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட அதே தினத்தன்றே தணிக்கை விதிகள் மீதான கட்டுப்பாடுகளைத் தளர்த்தப்போவதாக ஐக்கிய தேசியக் கட்சியுடனான சந்திப்பின் போது அரசு இணங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. ஆனால் அதே தினத்தன்றே உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு அப்பால் ஜனாதிபதியின் விசேட அதிகாரங்களைப் பயன்படுத்திய புதிய தணிக்கை விதிகள் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன.

பத்திரிகையாளர்கள் மீதான தாக்குதல்கள், தணிக்கை விதிகள் கட்டுப்பாடுகள், நெருக்கடிகள் இந்நாட்டுக்கு ஒன்றும் புதிய விடயங்கள் அல்ல.

1990 மே மாதம் சிரேஷ்ட பத்திரிகையாளர் ரிச்சார்ட் டி சொய்சா கடத்திச் செல்லப்பட்டு சித்திரவதை செய்யப்பட்ட பின்னர் மொறட்டுவைக் கடலில் வீசப்பட்டு பின்னர் சடலமாக மீட்கப்பட்டார்.

அப்போதைய பிரேமதாசா ஆட்சியாளர்களால் தென்னிலங்கையில் கட்டவிழ்த்து விடப்பட்ட மனிதப்படுகொலைகளை சர்வதேச உலகுக்கு கொண்டு வந்ததற்காகவே ரிச்சார்ட் டி சொய்சா கொல்லப்பட்டார்.

அதே காலப்பகுதியில் அந்த சிங்களப் பத்திரிகையின் கேலிச்சித்திரக்காரரின் வீட்டுக்குச் சென்று தாக்கியதுடன் மலர் வளையம் அனுப்பியது உட்பட பல கடும் நெருக்குதல்களை பத்திரிகையாளர்கள் எதிர்நோக்கினர்.

அதேபோல் ஆளும் பொது ஜன ஐக்கிய முன்னணியின் இன்றைய ஆட்சியிலும் 'சண்டே லீடர்' பத்திரிகையாளர் லசந்த மீதான தாக்குதல்கள், சண்டே ரைம்ஸின் இக்பால் அத்தாஸ் வீடு மீதான தாக்குதல், தமிழ்ப் பத்திரிகையாளர்களான கே. மாணிக்கவாசகம், ஸ்ரீகஜன் ஆகியோர் எந்த விசாரணையும் இன்றி கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டமை, மடு மாதா தேவாலயம் மீதான ஷெல்தாக்குதலை வெளியிட்டதற்காக தினக்குரல் ஆசிரியர் சிவநேசச்செல்வன், உதவி ஆசிரியர் டி.சிவகணேசன் ஆகியோர் 4ஆம் மாடிக்கு அழைத்துச் செல்லப்பட்டு விசாரிக்கப்பட்டமை, மட்டக்களப்பில் பத்திரிகையாளர் நடேசனின் மீதான தாக்குதல், சுதந்திர ஊடகவியலாளர் ஒன்றியம் நடத்திய ஊர்வலம் மீதான தாக்குதல், 'சட்டன' ஆசிரியர் ரோகண குமார படுகொலை என்பன இன்றைய ஆட்சியாளர்களின் பத்திரிகையாளர் மீதான தொடரும் நெருக்குதல்களை வெளிக்காட்டி நிற்கின்றன.

இதைவிட யாழ். குடாநாட்டில் வெளிவந்த தமிழ்ப் பத்திரிகைகள் அரசபடைகள், தமிழ் இயக்கங்கள், இந்தியப்படைகள் என்போரின் அடாவடித்தனங்கள் என்பனவற்றுக்கு முகம் கொடுத்தே வெளிவந்தன.

கடந்த வருடம் செப்டெம்பரில் உதயன் பத்திரிகை அலுவலகம் மீது கைக்குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் யாழ். குடாநாட்டில் ஆளும் கட்சியின் மிகவும் செல்வாக்குப் பெற்றதுமான ஒரு தமிழ்க் கட்சியினாலேயே மேற்கொள்ளப்பட்டதாக உதயன் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

**இந்த நாட்டின் சிங்கள பத்திரிகையாளர்கள் ஐ.தே.கட்சி, பொது ஜன ஐக்கிய முன்னணி ஆகியவற்றின் நெருக்குதலுக்கு மட்டுமே முகம் கொடுத்து வந்துள்ளனர். ஆனால் தமிழ்ப் பத்திரிகையாளர்களின் நிலைமை விபரீதமானது. அரச படைகள், அதற்கு ஈடான பலம் கொண்ட தமிழ் இயக்கங்கள் என பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்தே வாழ வேண்டிய சூழ்நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.**

இதேவேளை 1987 ஒக்டோபர் 19இல் அங்கு நிலைகொண்டிருந்த இந்தியப்படைகளால் முரசொலி, ஈழமுரசு ஆகிய பத்திரிகை அலுவலகங்கள் குண்டு வீசித் தாக்கப்பட்டன.

1988 பெப்ரவரி 29இல் ஈழநாடு அலுவலகம் விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு இலக்கானது.

அதேபோல் 1988 செப்டெம்பர் 27இல் ஈழநாடு அலுவலகம் மீது ஈ.பி.ஆர்.எல்.எவ். தாக்குதல் நடத்தியது.

இதேபோல் 1988இல் முரசொலி பத்திரிகை ஆசிரியர் திருச்செல்வத்தை அவரின் வீட்டுக்கு தேடிச் சென்ற ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்கத்தினர் அவர் இல்லாததால் திருச்செல்வத்தின் மகனான அகிலனைக் கடத்தி வந்து கொடூரமாக தாக்கிய பின்னர் சுட்டுக் கொன்றனர்.

1984களில் சற்றடே ரிவியூ பத்திரிகை அரசினால் தடைசெய்யப்பட்டது.

1981 ஜுன் 21இல் யாழ். நூலகம் எரிக்கப்பட்ட அதேதினம் ஈழநாடு பத்திரிகை அலுவலகமும் அப்போதைய ஐ.தே.க. ஆட்சியாளர்களின் தூண்டுதலினால் கொளுத்தப்பட்டது.

இந்த நாட்டின் சிங்கள பத்திரிகையாளர்கள் ஐ.தே.கட்சி, பொது ஜன ஐக்கிய முன்னணி ஆகியவற்றின் நெருக்குதலுக்கு மட்டுமே முகம் கொடுத்து வந்துள்ளனர்: ஆனால் தமிழ் பத்திரிகையாளர்களின் நிலைமை விபரீதமானது. அரசபடைகள் அதற்கு ஈடான பலம் கொண்ட தமிழ் இயக்கங்கள் என பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்தே வாழ வேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். ○

---

### உறவினரின் தொடர்பு இன்றி

# மோல்டா நாட்டில் தங்கியுள்ள ஈழத்தமிழர் இருவரின் விவரம்

## யாழ்.ஆயர் இல்லத்துக்குக் கிடைத்தது

தமது உறவினர்களுடன தொடர்பு ஏதுமின்றி மோல்டா நாட்டில் கடந்த ஒன்பது மாதங்களாகத் தங்கவைக்கப்பட்டிருக்கும் இரண்டு யாழ்ப்பாணத் தமிழர்களின் விவரம் யாழ்.ஆயர் இல்லத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜெனீவாவில் உள்ள சர்வதேச கத்தோலிக்க குடியேற்ற ஆணைக் குழுவில் அங்கத்துவம் பெற்று அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தின் ரோம் அலுவலகத்துடன் இணைந்து பணியாற்றும் மோல்டா குடியேற்ற ஆணைக் குழுவின் தலைவர் பிலிப் கஜேலா யாழ். ஆயருக்கு இது தொடர்பாக அறிவித்துள்ளார்.

அவர் தெரிவித்திருப்பதாவது:-.

நாற்பத்தைந்து இந்தியர்கள், இருபத்தைந்து பாகிஸ்தானியர்கள் மற்றும் ஐந்து இலங்கையரை ஏற்றிக் கொண்டு ஜோர்ஜியாவிலிருந்து இத்தாலி நோக்கிச் சென்று கொண்டிருந்த 'சியோஸ்' என்ற கப்பலை மோல்டா கடற்பிராந்தியத்தில் வைத்து மோல்டா ஆயுதப் படையினர் தடுத்து விசாரணை நடத்திய போது அக்கப்பல் கடலில் பயணம் செய்யத் தகுதியற்றது என்பது உறுதிப்படுத்தப்பட்டது.

கப்பலில் இருந்தோர் மோல்டாவில் உள்ள தடுப்பு முகாம ஒன்றுக்கு மாற்றப்பட்டனர். பின்னர் பாகிஸ்தானியர் மற்றும் இந்தியர்கள் தத்தமது நாட்டுக்குத் திரும்பிச் செல்ல பொலீஸார் ஏற்பாடு செய்தனர்.

இலங்கையர் ஐவரும் அகதிகளுக்கான அந்தஸ்துக் கோரி எமது அலுவலகத்திடம விண்ணப்பித்தனர்.

அகதிகளுக்கான ஐ.நா.தூதரகத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய அவர்களுக்கு அகதி அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது.

அவர்களில் இருவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள். தமது உறவினர்களுடன் 9 மாதங்களாகத் தொடர்பேதுமின்றி இருப்பதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். இருவரினதும் விவரங்கள் வருமாறு:-

★ ஐயங்கன் கிருதாஸ் - கைதடி மேற்கு.

★ நடராஜா விநோதரன் - தம்பாலை, அச்சுவேலி.

ஐயங்கன் கிருதாஸின் தாயார் கணபதியையும், விநோதரனின் தந்தையார் நடராஜாவையும் கண்டு பிடித்து தொடர்பு கொள்ள உதவுக.

- இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்டோர் அல்லது உறவினர்கள் யாழ்.ஆயர் இல்லத்தில் குரு முதல்வர் வண.பிதா செல்வராஜாவுடன் தொடர்பு கொண்டால் மேலதிக விவரங்களைப் பெற்றுக் கொள்வதோடு, மோல்டாவில் உள்ள தமது உறவினருடனும் தொடர்புகளை ஏற்படுத்த முடியும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (உ)

## ஆலோசனை பெறப்படும்

செம்மணி புதைகுழி தொடர்பாக நடத்தப்பட்ட விசாரணைகள் குறித்து சட்ட மா அதிபரின் ஆலோசனை பெறப்படவுள்ளது.

செம்மணி புதைகுழி தொடர்பாக குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தாம் நடத்திய விசாரணைகள் பற்றிய அறிக்கையை ஏற்கனவே சட்டமா அதிபரிடம் சமர்ப்பித்துள்ளனர்.

## துறைமுக தொழிலாளி காயம்

நெல்லியடி,ஜுலை17

இழுவைப் படகில் தவறி வீழ்ந்த துறைமுக தொழிலாளி ஒருவர் இடது காலில் படுகாயமடைந்தார்.

இச்சம்பவம் கடந்த வெள்ளி நண்பகல் 12.30 மணியளவில் பருத்தித்துறை துறைமுகத்தில் இடம் பெற்றது.

துன்னாலை மேற்கு, கலிகை யைச் சேர்ந்த மா.அருந்தவச்செல்வம் (வயது 26) என்பவரே காலில் காயத்துடன் மந்திகை மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஐ-109)

## விசர் நாய் ஏழு பேரைக் கடித்தது

நெல்லியடி,ஜுலை17

துன்னாலை மேற்கில் வீதியில் அலைந்து திரிந்த விசர் நாய் ஒன்று, ஒரே நாளில் ஏழு பேர்களை கண்டபடி கடித்துக் காயப்படுத்தியது.

கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்ற இச்சம்பவத்தில் சாவகச்சேரியிலிருந்து இடம்பெயர்ந்து இப் பகுதியில் வசித்து வரும், ஒரே குடும்பத்தைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை தியாகராசா (வயது 49), தியாகராசா யோகம்மா (வயது 48), தியாகராசா பிரசன்னா (வயது 15), தியாகராசா பிரசாந்தி (வயது 16) ஆகியோர்களும், ஜெயகாந்தன் சுகந்தா (வயது 20) ஜெயக்குமார் திலீபன் (வயது 13) ஜெயகாந்தன் தமிழ்ப்பிரியா (வயது 4) ஆகியோருமே கால்களிலும், கைகளிலும் காயமடைந்து மந்திகை மருத்துவமனையில் சிகிச்சைக்கு உள்ளாக்கப்பட்டனர்.

மக்கள் இடம்பெயர்ந்துள்ளதால் வளர்ப்பு நாய்கள் பராமரிப்பின்றி பல இடங்களிலும் அலைந்து திரிகின்றன. (ஐ-109)

# ஆளுங்கட்சியும் ஐ.தே.கவும் அரசியல் வியாபாரத்தில்!

## வாசுதேவ குற்றச்சாட்டு

கொழும்பு,ஜுலை17

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியும் ஐக்கிய தேசியக் கட்சியும் அரசியல் வியாபாரமே நடத்துகின்றன என்று இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனநாயக இடதுசாரி முன்னணிப் பிரமுகருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

ஜனநாயக இடதுசாரி முன்னணியை அரசியல் கட்சியாக அங்கீகரித்ததை ஒட்டி நேற்று முன்தினம் நடத்தப்பட்ட செய்தியாளர் மாநாட்டில் அவர் இதைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை இன முரண்பாடுகளுக்கு சகலரும் ஏற்கக்கூடிய தீர்வைக் காண பிடல்கஸ்ட்ரோ போல் அல்லாமல் மலேசியப் பிரதமர் மகதீர் முகமட் வழியில் சமாதான முறையில் முயற்சி மேற்கொள்ளலாம்.

நாட்டின் அரசியல் வரலாற்றில் இருபெரும் கட்சிகளும் இனவாதத்தை மாறிமாறித் தூண்டி வருகின்றன. கடந்த ஆட்சிக் காலத்தில் ஐ.தே.க. நடந்து கொண்ட மாதிரியே இன்றைய ஆட்சியாளர்களும் நடக்கிறார்கள். இந்த அரசு ஆட்சிக்கு வந்த சமயம் மக்கள் அதன் மீது வைத்த நம்பிக்கைகள் யாவும் சிதறடிக்கப்பட்டுள்ளன.

இருபெரும் கட்சிகளின் நடவடிக்கைகளுக்கும் எதிராகப் போராட இடதுசாரிக் கட்சிகளுக்கு விருப்பம் உள்ளது. ஆனால் அவற்றுக்குப் போதிய பலம் இல்லை. மக்கள் அவற்றுக்கு ஆதரவு வழங்கக் தயக்கம் காட்டுகிறார்கள் - என்றார் வாசுதேவ. (ஐ-3)

## அம்பாறையில் 315 வாக்களிப்பு நிலையங்கள்

மட்டக்களப்பு,ஜுலை17

விரைவில் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலுக்காக அம்பாறை மாவட்டத்தில் 315 வாக்களிப்பு நிலையங்கள் நிறுவப்படவுள்ளன.

அம்பாறைத் தொகுதியில் நூற்று 19 நிலையங்களும் பொத்துவில் தொகுதியில் 101 நிலையங்களும் சம்மாந்துறை தொகுதியில் 50 நிலையங்களும் கல்முனைத் தொகுதியில் 45 நிலையங்களும் நிறுவப்படவுள்ளன என மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் பந்துல ரவிச்சந்திர தெரிவித்துள்ளார். (ஐ-க)

## 138 குடும்பங்கள் தஞ்சம்

காரைநகர்,ஜுலை17

அண்மையில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையால் தமது சொந்த இடங்களை விட்டு இடம் பெயர்ந்த 138 குடும்பங்கள் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தங்கியுள்ளன.

இக் குடும்பங்களுக்கான நிவாரண விநியோகத்தை ஊர்காவற்றுறை பிரதேச செயலகம் மேற்கொண்டு வருகிறது. 'யுனிசெவ்' நிறுவனம் சமையல் பாத்திரங்கள் மற்றும் உணவுப்பண்டங்கள் அல்லாத பொருள்களையும் வழங்கியுள்ளது. (ஐ-73)

# வெளி மாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி பெற்றோர் விவரம்

யாழ். குடாநாட்டில் இருந்து வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்யப் பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டவர்களின் (இம்மாதம் 16ஆம் திகதி வரை) பதிவு இலக்கங்கள் பிரதேசசெயலர் ரீதியாக வருமாறு:-

**சங்கானை**

513/146304/A 513/146304/B
513/146354/A 513/146356/A
513/146363/A 513/146363/B
513/146363/C 513/146363/D
513/146382/A 513/146382/B
513/146382/C 513/146383/A
513/146383/B 513/146423/A
513/146424/A 513/146424/B
513/146424/C 513/146428/A
513/152562/A

**சாவகச்சேரி**

513/146339/A 522/126073/A
522/126073/B 522/148732/A
522/148746/A 522/148746/B
522/148746/C 522/148764/A
522/148764/B 522/148764/C
522/148764/D 522/148764/E
522/148774/A 522/153075/A
522/153075/B 522/153075/C

**நல்லூர்**

513/141270/A 513/141390/A
513/141391/A 513/144076/A
513/146326/A 513/146326/B
513/146327/A 513/146327/B
513/153427/A 513/153427/B

**சண்டிலிப்பாய்**

513/144089/A 513/146270/A
513/146270/B 513/146270/C
513/146270/D 513/146270/E
513/146270/F 513/146270/G
513/146306/A 513/146306/B
513/146306/C 513/146306/D
513/146306/E 513/146449/A
513/147235/A 513/148260/A
513/148260/B 513/148260/C
513/148284/A 513/148284/B
513/148284/C 513/152533/A
513/152533/B 513/152533/C
513/152533/D 513/152543/A
513/152543/B

**தெல்லிப்பழை**

513/139786/A

**உடுவில்**

513/134738/A 513/134738/B
513/134738/C 513/134738/D
513/141961/A 513/142140/A
513/142140/B 513/143592/A
513/143592/B 513/143592/C
513/143897/A 513/143897/B
513/143897/C 513/143897/D
513/143897/E 513/143922/A
513/143922/B 513/143922/C
513/143922/D 513/143922/E
513/144009/A 513/144009/B
513/144009/C 513/144166/A
513/144166/B 513/144166/C
513/146316/A 513/146332/A
513/146332/B 513/146333/A
513/146333/B 513/146333/C
513/146333/D 513/153428/A
513/153428/B 513/153463/A
513/153464/A 513/153470/A

# பொருளாதார சமூக உரிமைகள் புதிய அரசமைப்பில் புறக்கணிப்பு!

## மனித உரிமைகள் பிரதிநிதி தெரிவிப்பு

கொழும்பு,ஜுலை17

"ஒவ்வொரு பிரஜையினதும் அடிப்படை உரிமைகளில் பொருளாதார, சமூக உரிமைகள் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. ஆனால் இலங்கையின் புதிய அரசமைப்பு சட்டத்தில் இப்பிரஜைகளுக்குரிய உரிமைகள் உத்தரவாதப்படுத்தப் படவில்லை. இது தொடர்பாக எதிர்க்கட்சியினர் அரசுடன் பேச்சுவார்த்தைகள் நடத்துவதாகத்தெரிய வருகின்றது" என்று டாக்டர் ராதிகா குமாரசுவாமி தெரிவித்தார்.

"மனித உரிமைகளும் மனித அபிவிருத்தியும்" என்ற தலைப்பில் ஐக்கியநாடுகள் சபையின் ஓர் அங்கமான ஐக்கியநாடுகள் அபிவிருத்தித்திட்டம் (UNDP) அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. சர்வதேசரீதியில் நாட்டு நடப்புகளை கருத்தில் கொண்டு வெளியிடப்பட்ட இவ்வறிக்கை அண்மையில் உத்தியோகபூர்வமாக இலங்கையில் அறிமுகம் செய்துவைக்கப் பட்டது.

டிரான்ஸ் ஏசியா ஹோட்டலில் இலங்கையிலுள்ள ஐ.நா.சபையின் கிளைக் காரியாலத்தில் இயங்கும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்ட நிரலின் வதிவிடப் பிரதிநிதி பீட்டர் வித்தாம் தலைமையில் இடம்பெற்ற வைபவத்தில் டாக்டர் ராதிகா குமாரசுவாமி மேலும் தெரிவித்ததாவது:-

"மனித உரிமைகள் என்பது ஒவ்வொரு நாட்டின் அரசாங்கத்தினால் பிரஜை ஒவ்வொருவருக்கும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்! ஏனைய மனித உரிமைகளுடன் பொருளாதார சமூக உரிமைகளும் (Economic and Social Rights) வழங்கப்படவேண்டும். இலங்கையின் புதிய அரசமைப்புச் சட்டத்தில் பிரஜைக்குள்ள பொருளாதார சமூக உரிமைகளை உத்தரவாதப் படுத்தும் சரத்து அகற்றப்பட்டுள்ளதாக அறிகிறேன். இது பாரதூரமான விடயமாகும். இதை மீண்டும் உள்ளடக்குவதற்கான பேச்சுவார்த்தைகள் அரசாங்கத் தரப்பினருடன் மேற்கொள்ளப்படுவதாகவும் அறிகிறேன்" என்றார்.

இவ்வைபவத்தில் உரையாற்றிய ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்ட நிரலின் வதிவிடப் பிரதிநிதி பீட்டர் வித்தாம் உரையாற்றுகையில் "மனித உரிமைகளும் மனித அபிவிருத்தியும் ஒன்றுடன் ஒன்று பின்னிப்பிணைந்த விடயங்களாகும். மனித உரிமைகள் ஒரு பிரஜைக்கு வழங்கப்படாத விடத்தில் மனித அபிவிருத்தியோ நாட்டின் அபிவிருத்தியோ இடம்பெறாது.

ஒருநாட்டு மக்களுக்கு தமக்கென்று ஒரு தேசம், உரிமைக்குரலும் (Voice) இருக்கும்போது தான் ஊக்கமுடன் அபிவிருத்தி முயற்சியில் ஈடுபடுவர். அப்போது நாடு அபிவிருத்தி அடையும்.

"மனித உரிமைகளும் மனித அபிவிருத்தியும் என்ற தலைப்பிலான இந்த அறிக்கையை இன்று நாங்கள் வெளியிட்டு வைக்கின்றோம். சம்பந்தப்பட்டவர்கள் இந்த அறிக்கையை ஒரு வாகனமாக (மனித உரிமைகளை முன்னேற்றுவதற்கு) பயன்படுத்த வேண்டும் என்பதே எமது விருப்பமாகும்" என்றார். (ஐ)

## சந்தேக நபர்கள் மூவர் விடுதலை

கொழும்பு,ஜுலை17

நாடாளுமன்றத்துக்குச் செல்லும் பாதையில் - இராஜகிரியவில் - கடந்த மார்ச் மாதத்தில் நடைபெற்ற பெரும் குண்டுவெடிப்புச் சம்பவத்தில் சந்தேக நபர்களாக இருந்த மூன்று தமிழர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை கொழும்பு பிரதம நீதிவான் ஜி.டி.குணதிலக்க முன்னிலையில் இந்த வழக்கு எடுக்கப்பட்டபோது சந்தேக நபர்களான செல்லச்சாமி இராமச்சந்திரன், வீரையா வேலாயுதம், சின்னையா கங்காதீஸ்வரன் ஆகியோரே விடுதலை செய்யப்பட்டனர்.

மூவருக்கும் எதிராகச் சாட்சியங்கள் இல்லாதபடியால் இவர்களை விடுதலை செய்யலாம் என குற்றத்தடுப்பு பணியகத்தினால் மன்றுக்கு அறிவிக்கப்பட்டது.

சம்பவம் நடந்த இடத்தில் இறந்து கிடந்த நபரிடம் இருந்து பல கடிதங்கள் கைப்பற்றப்பட்டதாகவும் அவற்றில் காணப்பட்ட கையெழுத்துக்களுக்கும் இந்த மூவரின் கையெழுத்துக்கும் தொ[illegible] இருக்கின்றதா என்று நிபுணர்[illegible] மேற்கொண்ட பரீசீலனையில் சந்தேக நபர்களுக்கும் அந்தக் கடிதங்களுக்கும் தொடர்பு இல்லை என்பதும் உறுதிப்படுத்தப்பட்டது. இவர்களுக்கு எதிராக வேறு சாட்சியங்கள் இல்லாததால் மூவரையும் விடுதலை செய்யுமாறு மன்றில் ஆஜராகிய குற்றத்தடுப்புப் பணியகத்தின் பொலீஸ் இன்ஸ்பெக்டர் எஸ்.என். குணவர்த்தன தெரிவித்திருந்தார்.

இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாகக் கைதுசெய்யப்பட்டுள்ள மேலும் ஐவரைத் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். இவர்கள் சம்பந்தமான விசாரணை முடிவுகளை இம்மாதம் 27ஆம் திகதி மன்றில் சமர்ப்பிக்குமாறும் உத்தரவிட்டார். (ஐ-க)

## பங்கீட்டு அட்டைகள் மீளாய்வு

நெடுந்தீவு,ஜுலை17

வேலணை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட அனைத்து கிராம அலுவலர் பிரிவுகளிலும் பங்கீட்டு அட்டைகள் மீளாய்வு செய்யப்படுகின்றன.

சமீபத்திய இடப்பெயர்வினைத் தொடர்ந்து சுமார் 125 குடும்பங்கள் வரை மேற்படி பிரிவில் தங்கியுள்ளதாகத் தெரிகின்றது. (ஐ-111)

## சித்திரக் கண்காட்சி

நெடுந்தீவு,ஜுலை17

தீவகக் கல்வி வலய சித்திரக் கண்காட்சி கடந்த வெள்ளியன்று ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் நடைபெற்றது.

தீவக வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.ராதாகிருஷ்ணவின் தலைமையில் நடைபெற்ற கண்காட்சியை யாழ். மத்திய கல்லூரியின் முன்னாள் அதிபர் நா.க. சண்முகநாதபிள்ளை திறந்துவைத்தார்.

பெரும் எண்ணிக்கையான மாணவர்களும் பொதுமக்களும் கண்காட்சியைப் பார்வையிட்டனர். (ஐ-111)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

சிவஸ்ரீ

### க. சோமசுந்தரக் குருக்கள்

நிகழும் விக்கிரம வருடம் ஆனி மாதம் 19.06.2000 திங்கட்கிழமை அன்று பருத்தித்துறை மாவட்ட நீதிபதி எஸ்.ஏ.ஈ. ஏகநாதன் முன்னிலையில் இலங்கைத்தீவு முழுவதற்குமான சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்ட இலங்கை சைவக்குருமார் அர்ச்சகர் பேரவையின் கௌரவ செயலாளரும், இலங்கை வித்தியாலய அதிபர் - சங்கத் தலைவரும், அளவெட்டி சதானந்த வித்தியாலய அதிபரும், கரவெட்டி கிழக்கு ஸ்ரீ பத்திரகாளி தேவஸ்தானப் பிரதம அர்ச்சகரும், குரும்பசிட்டி தெல்லிப்பழையைச் சேர்ந்தவருமான - சிறந்த சமூக சேவையாளருமான சிவஸ்ரீ. **க. சோமசுந்தரக்குருக்கள்** அவர்களை எங்கள் பேரவையின் சார்பில் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**இலங்கை சைவக்குருமார் அர்ச்சகர் பேரவையினர்.**

(76428)

## முக்கிய அறிவித்தல்

தென்மராட்சி மேற்கு (கைதடி) ப.நோ.கூ சங்கக் கிராமிய வங்கியில் ஓய்வூதியம் பெறுபவர்கள், பிரதேச செயலரால் நியமிக்கப் பெற்ற உத்தியோகத்தரிடம், தங்கள் கிராமியவங்கி வைப்புப் புத்தகத்துடன் சமுகமளித்துக் கோரப்படும் விவரங்களைக் கொடுத்துதவுமாறு வேண்டுகிறோம். அடுத்த மாத ஓய்வூதியம் வழங்குவதற்கு உங்கள் விவரங்கள் தேவைப்படுகின்றன.

தலைவர்
தென்மராட்சி மேற்கு
ப.நோ.கூ.ச.
(கைதடி)

தற்காலிக முகவரி:-
இணுவில் வைத்தியசாலை,
இணுவில்.

(C/12239)

## ஓட்டோ விற்பனைக்கு

208 - 3171 இலக்கமுடைய புதிய 5 - PORT ENGINE ரகமுடைய ஓட்டோ விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: செ. கருணாதேவன்
நாகதம்பிரான் கோயிலடி,
ஊரெழு மேற்கு, சுன்னாகம்.

(76423)

## விற்பனைக்கு

40 அடி நீளமான புதிய தகரப்பந்தல், 100 புதிய வாடகைக் கதிரைகள் என்பன விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:-
மாருதி தளபாட நிலையம்
618, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
(பன்றிக்கோட்டுப் பிள்ளையார் கோவில் முன்பாக)

(76417)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம் 30 - 08 - 1966

மறைவு 29 - 07 - 1999

திதி:- 17.07.2000

அமரர்

### இராசரத்தினம் ஜெயக்குமார்

ஆண்டு ஒன்று சென்றதையா
ஆறியதோ எம் துயர்?
இன்று அரும்பிய துயர்
போலவே துடிக்கின்றோம் ஐயா!
நூறாண்டு சென்றாலும் உம் நினைவு
எம் நெஞ்சை விட்டு அறுந்திட முடியுமா ஐயா?

சாந்தி! சாந்தி! சாந்தி!!

அப்பா, அம்மா, சகோதரர்கள்,
190, அரசடி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

மனைவி, பிள்ளைகள்,
வவுனியா.

(C/12236)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 04 - 07 - 1989

உதிர்வு 17 - 06 - 2000

### காயத்திரி தெய்வேந்திரன்

(YR.6 மாணவி, சண்டிக்குளி ம.கல்லூரி)

அன்புச் செல்வமே!
அருமைச் சகோதரியே!

உன் பிரிவுத்துயர் - எம்
உயிரை உருக்குதம்மா - இனி
என்று காண்போம் உன்னை?

உன் பிரிவால் துயருறும் குடும்பத்தினர்.

தற்காலிகமுகவரி:-
டச்சு வீதி,
சித்தன்கேணி.

நிரந்தர முகவரி:-
54, முதலியார் லேன்,
நல்லூர் தெற்கு,
யாழ்ப்பாணம்.

(76440)

# 900 பாடசாலை மாணவரிடம் பிறப்புச் சான்றிதழ் இல்லை!

## கணிப்பீட்டில் கண்டுபிடிப்பு

வலிகாமம் தெற்கு, ஜூலை 17

வலிகாமம் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலை மாணவர்களில் சுமார் 900 மாணவர்களுக்கு பிறப்புச் சான்றிதழ்கள் இல்லை எனக் கணிப்பீடுகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

பிறப்புச் சான்றிதழ்கள் இல்லாத காரணத்தினால் இவர்கள் பாடசாலை இணைப்பாடவிதானப்போட்டிகள் மற்றும் கோட்ட, வலய, மாகாண, தேசிய மட்டத்திலான எந்தப் போட்டிகளிலும் பங்குபற்ற முடியாத நிலை காணப்பட்டது.

பெற்றோர்களின் அறியாமை, பிறப்புச் சான்றிதழ்களின் முக்கியத்துவம் பற்றி உணராத தன்மை, பல்வேறு சமூகப் பிரச்சினைகள், அரச ஊழியர்களின் கவனமின்மை அல்லது கிடைக்கப்பெற்ற சான்றிதழ்களை இழந்திருத்தல் போன்ற பல காரணங்களால் மாணவர்களுக்குப் பிறப்புச் சான்றிதழ்கள் கிடைக்கப் பெறாமல் இருந்துள்ளது.

யாழ். மாவட்ட பதிவாளர் திணைக்களம் கல்வி வலயங்களுடன் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கைகளின் பயனாகப் பல மாணவர்களுக்கு பிறப்புச் சான்றிதழ்கள் கிடைக்க உள்ளன.

சான்றிதழ் இல்லாத மாணவர்களுக்கு அதனைப் பெறுவதற்காக அனுப்பி வைக்கப்பட்ட விண்ணப்பங்களில் வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை மாணவர்களில் 141 மாணவர்களுக்கான பிறப்புச் சான்றிதழ்கள் விரைவில் வழங்கப்பட உள்ளன.

(ஐ-152)

# கோஷ்டி மோதலில் சிக்கி காவலாளி படுகாயம்!

நெல்லியடி, ஜூலை 17

நள்ளிரவு வேளை ஆரம்பமான கோஷ்டி மோதலின் போது இடையில் அகப்பட்ட காவலாளி ஒருவர் தலையில் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் ஞாயிறு நள்ளிரவு துன்னாலையிலுள்ள வேம்படி என்ற இடத்தில் இடம் பெற்றது.

இப்பகுதியிலுள்ள தனி பார் கடைகளில், இரவுக் காவாளியாகப் பணிபுரியும் இதே இடத்தைச் சேர்ந்த ஆழ்வான் சௌந்தரநாயகம் (வயது 45) என்பவரே தலையில் காயமடைந்துள்ளார்.

இதே வேளை —

இக் கோஷ்டி மோதலில் வெட்டுக்காயங்களுக்கு இலக்கான அ. குணம் (வயது 35) பொன்ராஜா - ரூபாலினி (வயது 15) ஆகிய இருவரும் மந்திகை மருத்துவமனையிலிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்

(ஐ - 109)

# யாழ். மக்களின் அவலங்களை அறிவதும் எமது நோக்கம்

## ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 17

யாழ். குடாநாட்டு மக்கள் அனுபவிக்கும் அவலங்கள் குறித்து அறிவதற்கும் —

சமாதானத்தீர்வு ஒன்றை எட்டுவதற்கான சாத்தியக் கூறுகள் தொடர்பாக ஆராய்வதற்குமே— தாங்கள் இலங்கை வந்துள்ளதாக ஐரோப்பிய ஒன்றியத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை கொழும்பு வந்துசேர்ந்த றிச்சர்ட் கேவிட், றொபர்ட் லேன் ஆகிய இரு நாடாளுமன்ற உறுப்பினர்களும் இப்படிக் கருத்து வெளியிட்டுள்ளனர்.

கொழும்பில் தங்கியுள்ள காலத்தில் பல்வேறு கட்சிகளுடனும், அரசசார்பற்ற அமைப்புக்களுடனும் கலந்துரையாடி விவரங்களைப் பெறவுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

பிரிட்டிஷ் வெளியுறவு ராஜாங்க அமைச்சர் பீற்றர் வெஸ் மசெட் இலங்கைக்கு இருநாள் விஜயம் மேற்கொண்டு பல நாட்டவர்களுடன் பேச்சுக்கள் நடத்தி நாடு திரும்பிய கையோடு ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகள் இலங்கை வந்துள்ளமை முக்கியத்துவம் பெறுவதாகச் சுட்டிக்காட்டப் படுகின்றது.

இனப்பிரச்சினைத் தீர்வுக்காக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முன்னெடுத்து வரும் செயற்பாடுகளை ஐரோப்பிய நாடுகள் உன்னிப்பாகக் கவனிக்கின்றன என்றும் —

அடுத்துவரும் மாதங்களில் பெரும் எண்ணிக்கையான ராஜதந்திரிகள் இலங்கை வருகின்றனர் என்றும். —

ஐரோப்பிய நாடு ஒன்றின் ராஜதந்திரி கொழும்பில் தகவல் வெளியிட்டுள்ளார்.

(ஐ-3)

# சனசமூக நிலையம் புனரமைப்பு

சண்டிலிப்பாய், ஜூலை 17

சில்லாலை மத்திய சனசமூக நிலையம் விரைவில் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது. இந் நிலையத்தினர் விடுத்த கோரிக்கையை அடுத்து அண்மையில் வலி. தென்மேற்கு பிரதேச சபைத் தலைவர் வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன் சபை அதிகாரிகள் சகிதம் நேரில்சென்று நிலையக் கட்டடத்தைப் பார்வையிட்டுச் சென்றார். இதனைத் தொடர்ந்து இந்த நிலையத்தின் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக பிரதேச சபை 75 ஆயிரம் ரூபாவை வழங்கியுள்ளது.

(ஐ-135)

# பொய்ச்சாட்சி சொன்னாராம் பிரதேச சபை தலைவருக்கு சிறை!

கொழும்பு, ஜூலை 16

கொலை வழக்கு ஒன்றில் பொய்ச்சாட்சி சொன்ன பிரதேச சபை உபதலைவருக்கு காலி மேல்நீதிமன்றம் ஐந்து வருட கடுழியச் சிறையும், 10 ஆயிரம் ரூபா அபராதமும் விதித்தது.

காலி மாவட்டத்தைச் சேர்ந்த நெலுவ பிரதேச சபையின் உபதலைவருக்கே இந்தத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது

(இ-3)

# கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூலை 17

யாழ். பல்கலைக்கழக மூன்றாம் வருடப் பொதுக்கலை கற்கை நெறி மாணவர்களுக்கான பரீட்சை பற்றிய அவசர கலந்துரையாடல் இன்று திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு இடம்பெற உள்ளது. அனைத்து மூன்றாம் வருட பொதுக்கலை மாணவர்களையும் சமுகமளிக்குமாறு கற்கை நெறியின் மாணவர் பிரதிநிதி கேட்டுள்ளார்.

(ஐ-8)

# நினைவு நாள் திருப்பலி

மறைந்த யாழ். ஆயர் ஜே. எமிலியானுஸ்பிள்ளை அவர்களின் நினைவு நாள் இன்றாகும்.

இவரின் நினைவாக யாழ். ஆயர் அதிவந். சௌந்தரநாயகம் ஆண்டகையினால் இன்று காலை 6–45 மணிக்கு யாழ். பேராலயத்தில் விசேட திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

(ஐ-51)

## வாசகர் திருமுகம்

# சட்டவிரோத மின் பாவனை

கோண்டாவில் கிழக்கு களஞ்சியசாலைக்கு முன்னால் அமைந்துள்ள மின் பிறப்பாக்கி மூலம் ஒழுங்கான முறையில் மின் வழங்கப்பட்டு வந்தபோதும் அம்மின் பிறப்பாக்கி மூலம் மின்னைப் பெறுகின்ற ஒரு சில வீதிகளில் தொடர்ச்சியாக சில தினங்களாக மின் தடைப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மின் பாவனையாளர்களின் ஒழுங்கற்ற செயல்கள் காரணமாக — உரிய முறைப்படி மின்னைப் பெறாதவர்களின் செயற்பாடுகள் காரணமாக சில தினங்கள் மின் தடைப்பட்டு வருகின்றது. இதனால் இம் மாத இறுதியில் நடைபெற இருக்கும் ஜி. சி. ஈ பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களாகிய நாம் பெரிதும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. அது மட்டுமன்றி ஏனைய மாணவர்களது தவணைப் பரீட்சைகளும் ஆரம்பமாக இருக்கின்றன.

இந்நிலையில் ஒழுங்கற்ற முறையில் மின்னைப் பெறுபவர்களின் பொறுப்பற்ற செயற்பாடுகளால் நாம் மிகவும் பாதிக்கப்படவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. இனியாவது இப்படி மின்னைப் பெறுபவர்கள் தாமாக உணர்ந்து அந்நிலையைக் கைவிட்டு எமக்கு உதவி செய்வதோடு அதற்கு மின்சார சபையினர் உரிய நடவடிக்கையினை எடுப்பார்கள் என நம்புகின்றேன்.

பாதிக்கப்பட்ட மாணவர்கள் சார்பாக

இ. ராஜ்

# மனிதாபிமான அடிப்படையில் வங்கிநிர்வாகங்கள் செயற்படுமா?

அன்றாட தேவைக்காகவும், எதிர்காலத் தேவைக்காகவும் மக்கள் தமது செலவுகளைச் சுருக்கிப் பணத்தைச் சேமிப்பது வழக்கம். சேமித்த பணத்தையும் இலகுவாக பெறக்கூடிய முறையில் இடுவதை விரும்பி பனை, தென்மராட்சிப் பிரதேச மக்கள் சாவகச்சேரி வங்கிகளில் பணத்தைச் சேமிந்தார்கள். பணத்தை வங்கியில் இடும்போது இருந்த வரவேற்பு இன்று நிர்க்கதிக்குள்ளாகி இடம்பெயர்ந்து பணம் மீளப் பெறும்போது இல்லையே!

எத்தனையோ அவசியத் தேவைகளுக்காக, துன்பங்களுக்காக நிலையான வைப்பிலிருந்து ஒரு சிறு பகுதியைக் கடனாகப் பெற்று விட்டு. இன்று நிலையான வைப்பை மீளப்பெற முடியாத நிலை காணப்படுகின்றது. பெற்ற கடனுக்கு வட்டியும் சேர்த்துக் கட்ட முன்வந்தாலும் நிலையான வைப்பை மீளக் கொடுக்க முடியாத நிலையில் (சான்றிதழ்) வங்கி நிர்வாகிகள் உள்ளனர்.

'மக்கள் சேவையே எங்கள் நோக்கம்' 'மக்கள் நலனே எங்கள் பொறுப்பு ......, என்று விளம்பரம் செய்த, வங்கிகள் இன்று மௌனமாக இருப்பதேன்? வியர்வை சிந்தி உழைத்து, ஒடிப்போனாலும் தேவையென நினைத்துச் சேர்த்த பணம் இடம்பெயர்ந்த போது உதவாது போனால் நிலைமை சரிவந்த பின்னர் வங்கி தந்து என்ன பலன்?

பலர், தென்மராட்சி மக்களில் 40 சதவீதமானோர் வடமராட்சியில் உள்ளனர். 10 சதவீதமான மக்கள் வரணி, கொடிகாமம், உசன், மிருசுவில் பகுதியில் உள்ளனர். இந்த 50 சதவீத மக்களுக்கும் அருகே போக்குவரத்து வசதி வடமராட்சிக்குண்டு. இருந்தும் 50 சதவீத மக்களுக்காக வாரத்தில் இருநாளாவது பருத்தித்துறையில் தேசிய சேமிப்பு வங்கி இயங்க முடியாதா?

செஞ்சிலுவைச்சங்கம், அரச அதிபர், சர்வதேச அமைப்புகள் என்பவற்றின் உதவியுடன் தென்மராட்சியில் உள்ள ஆவணங்களை எடுத்து வந்து மக்கள் பணத்தை வழங்குவது தர்மம், மனிதாபிமானம். வங்கிச் சட்ட முறையில் நோக்காது கருணை அடிப்படையில் மூன்று வங்கிகளும் அதி உச்ச முயற்சிகளைச் செய்து வங்கி ஆவணங்களை எடுத்து வந்து உதவினால் போற்றப்படவேண்டியவர்களே! நன்றியுடைத்துள்ளவர்களே! எப்போது இந்த நாள் வரும்? எமது சொந்தப்பணம் எப்போது எம்கையில் கிடைக்கும்?

பாதிக்கப்பட்ட வங்கி வாடிக்கையாளர்கள்,
தென்மராட்சி இடம்பெயர்ந்தோர்.

# பயணிகள் அனுபவிக்கும் கஷ்டங்களை எம்மால் பொறுத்துக்கொள்ள முடியாது

## பிரதேச சபைத் தலைவர் உரை

யாழ்ப்பாணம், ஜூலை 17

யாழ். சிவில் நிர்வாக காரியாலயத்தில் கொழும்பு பிரயாணத்திற்குப் பதிவு செய்தவர்கள் பெரும் சிரமங்களைச் சந்திக்க வேண்டி உள்ளது. இதனை எம்மால் பொறுத்துக்கொள்ள முடியாது என்று ஈ.பி.டி.பி.யின் வட்டுக்கோட்டைத்தொகுதி அமைப்பாளரும் வலிகாமம் மேற்கு பிரதேச சபைத் தலைவருமான ந. திரிலோகநாதன் தெரிவித்தார்.

காரைநகர் கிழக்கிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு புதிய பஸ்சேவை ஒன்றினை கடந்த புதன்கிழமை ஆரம்பித்து வைத்த நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த பஸ்சேவை ஆரம்ப நிகழ்வில் வட பிராந்திய போக்குவரத்துச்சபை பொது முகாமையாளர் வி. எஸ். சொக்கலிங்கம், வலி மேற்கு பிரதேச சபைச் செயலாளர் மா. புலேந்திரன் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

திரிலோகநாதன் அங்கு உரையாற்றும்போது மேலும் கூறியதாவது:- பாடசாலை மாணவர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள், வயோதிபர்களின் நலன் கருதியே இச்சேவை ஆரம்பிக்கப்படுகிறது.

நாட்டின் இன்றைய யுத்த அனர்த்தத்துக்கும், இராணுவ கெடுபிடிகளுக்கும் மத்தியில் எமது அமைப்பானது (ஈ.பி.டி.பி.) தனது சேவைகளைத் தொடர்ந்து மக்களுக்கு ஆற்றி வருகின்றது. எமது சேவைகளைப் பொறுக்க முடியாத சில பச் சோந்திகள் எம்மை அவதூறு படுத்தி வருகின்றனர். யாழ் குடாநாட்டில் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் ஏற்பட்ட போரில் மூட்டை முடிச்சுக்களைக் கட்டி யாழ். குடாவை விட்டு ஓடியவர்களையும் மக்கள் அறிவர்.

ஈ.பி.டி.பியின் வளர்ச்சி ஆலமரத்தைப் போன்றது; அதை யாரும் மாற்றிவிட முடியாது. எமது கட்சியின் செயலாளர் நாயகம் கே. என். டக்ளஸ் தேவானந்தா, யாழ். மாவட்ட அமைப்பாளர் கே. வி. குகேந்திரன் (ஜெகன்) ஆகியோரின் பணிப்புரையின் பேரில் அனர்த்த வேளையிலும் இடம்பெயர்ந்த மக்களைத் தேடிச் சென்று அவர்கள் நலன்களை உடனடியாகப் பார்வையிட்டோம். தேர்தல் காலத்தில் மூட்டை முடிச்சுடன் வந்து தேர்தல் முடிந்தவுடன் மூண்டி அடித்து சென்றவர்களையும் நாம் மறக்கவில்லை.

தனது மணவாளனை எதிர்பார்த்து கொழும்பு செல்லும் மணப்பெண்கள் பல தடவை சிவில் நிர்வாக அலுவலகத்துக்கு அலைந்து மனவிரக்தியடைந்து அலைந்து திரியும் காட்சியும் எம்மனதை உருக வைத்துள்ளது.

இது விடயமாக அசட்டை செய்யும் அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும், கப்பல் சேவைகளை இன்னும் கூட்டுமாறும் ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட பிரதி அமைப்பாளர் திரு. க. நிஷாந்தன் மூலம் செயலாளர் நாயகம் கே. என். டக்ளஸ் தேவானந்தாவை கேட்டுள்ளோம்.

இப்படி அவர் தனது உரையில் மேலும் தெரிவித்தார்.

(ஐ-7-5)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

தமிழ் தட்டச்சு இயந்திரம், ரியூட்டறிக்குரிய வாங்கு மேசைகள், அரியப்பட்ட தென்னம் பலகைகள் உடன் விற்பனைக்கு உண்டு. (தினமும் மாலை 3-6 மணி வரை) தொடர்புகளுக்கு: அ. ராகவன், 3 ஆம் கட்டை, கல்வியங்காடு.

(76464)

## திருத்துதல்

மூக்குக்கண்ணாடி ஒட்டுதல், சகல கமரா வகைகளும், எலக்றோனிக் பிளாஸ் கண், புகைப்படத் துறை சார்ந்த ஏனைய துணைக் கருவிகளும் திருத்திக் கொடுக்கப்படும். சு. நாராயணசாமி, 301, கஸ்தூரியார் வீதி, (மேல் மாடி) கன்னாதிட்டிச் சந்திக் கருகில், யாழ்ப்பாணம்.

(76467)

## வீடு வாடகைக்கு

J. J. இராஜசிங்கம் இல. - 09, பிளைச்சர் ஒழுங்கை, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் (சுண்டுக்குளி மகளிர் கல்லூரிக்கு அண்மையில்) தற்பொழுது ஒரு குடும்பம் வசித்துக் கொண்டிருக்கும் ஒரு வீட்டுடன் வசதிகள் நிறைந்த ஓர் இணைந்த வீடு வாடகைக்கு உண்டு. மலசலகூடம், குளியலறை, தனிப்பாதை என்பனவும் அமையப் பெற்றது. மேற்கூறிய முகவரியுடன் வெகுவிரைவில் தொடர்பு கொள்ளவும்.

(76439)

# நிபந்தனையின்றிப் பேச விரும்புவதை உத்தியோக பூர்வமாக அறிவியுங்கள்

## ஜனாதிபதியிடம் மட்டு. எம். பி. கோரிக்கை

மட்டக்களப்பு, ஜூலை 17

எந்தவித நிபந்தனையும் இல்லாமல் விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்குத் தயார் எனக் கூறியுள்ள ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அந்த அறிவிப்பை உத்தியோக பூர்வமாக விடுக்க வேண்டும்.

இவ்வாறு கோரியுள்ளார் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரி. செல்வராஜா.

மட்டக்களப்பு செங்கலடி வித்தியாலயத்தில் இடம்பெற்றபொது வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இந்தக்கோரிக்கையை விடுத்தார்.

இனப்பிரச்சினை தொடர்பாகவும் விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்துவது தொடர்பாகவும் ஜனாதிபதி மற்றும் அமைச்சர்கள் தெரிவித்துவரும் கருத்துக்கள் முரண்பாடாகவே உள்ளன.

திம்புக் கோட்பாட்டின் அடிப்படையில் வரையப்பட்ட தீர்வு ஒன்றையே தமிழர் விடுதலைக் கூட்டணி அரசாங்கத்திடம் வலியுறுத்தி வருகின்றது.

எனவே நெருக்கடி மிகுந்த இந்தக் காலகட்டத்தில் விடுதலைப் புலிகளுடன் நிபந்தனையற்ற முறையில் பேசுவேன் என்று கூறிய ஜனாதிபதி அதனை நிலைநாட்ட வேண்டும் — என்று அவர் அங்கு மேலும் தெரிவித்தார்.

(ஐ-7-4)

# கோழிகளுக்குத் தொற்று நோய்

பண்டத்தரிப்புப் பகுதியில் கோழிகளுக்குத் தொற்று நோய் ஏற்பட்டதை அடுத்து வீடுகளில் வளர்க்கப்பட்டு வந்த கோழிகள் இறந்து வருகின்றன. நோய்த்தடுப்பு மருந்து கொடுக்கப்பட்ட கோழிகளும் இறந்துள்ளதாகத் தெரிய வருகின்றது. இதனால் கோழி வளர்ப்பாளர்கள் மிகுந்த நஷ்டமடைந்துள்ளனர். (ஐ-135)

# 41 அரசியல் கட்சிகள் போட்டியிடத் தகுதி

கொழும்பு, ஜூலை 17

விரைவில் நடைபெறவுள்ள 11 ஆவது பொதுத்தேர்தலில் போட்டியிடுவதற்கு 41 அரசியல் கட்சிகள் தகுதி பெற்றுள்ளதாக பிரதித் தேர்தல் ஆணையாளர் எஸ். பிறேமரத்ன தெரிவித்துள்ளார்.

கடந்த பொதுத் தேர்தலில் 34 கட்சிகள் மட்டுமே தேர்தலில் போட்டியிடுவதற்குத் தகுதி பெற்றிருந்தன என்று கூறிய அந்த அதிகாரி இம்முறை வாக்களிப்பதற்கு ஒரு கோடியே 2 லட்சத்து 71 ஆயிரத்து 101 பேர் தகுதி பெற்றுள்ளனர் என்றும் கூறினார்.

நாடெங்கும் சுமார் 10 ஆயிரம் வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிப்பு நடைபெறவுள்ளது இத்தேர்தலுக்காக 5 கோடி ரூபா செலவிடப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (ஐ- 5-4)

# விஞ்ஞான கூடம் அமைக்க நிதி

வலி. கிழக்கு, ஜூலை 17

அச்சுவேலி மகாவித்தியாலயத்திற்கு செயற்பாட்டறை விஞ்ஞான கூடம் அமைக்கவென கல்வித் திணைக்களத்தினால் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து வேலைகளை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஐ-180)


சாவகச்சேரி

## கைத்தொழில் வணிகர் மன்ற அவசர செயற்குழுக் கூட்டம்

கடந்த மாதம் நடந்த அனர்த்தங்களால் இடம் பெயர்ந்த சாவகச்சேரி வணிகர் மன்றச் செயற்குழு உறுப்பினர் அனைவரையும் எதிர் வரும் 19 - 07 - 2000 அன்று புதன் கிழமை காலை 10 மணியளவில் நெல்லியடி வணிகர் மன்றக் காரியாலத்தில் கூடும் செயற்குழுவின் அவசர கூட்டத்தில் எமது அடுத்த நிகழ்வுகளைப் பற்றிக் கலந்தாலோசிக்க இருப்பதால் எங்கிருந்தாலும் தவறாது கலந்து கொள்ளும் படி கேட்டுக் கொள்கின்றேன்.

வ. இராசதுரை
செயலாளர்
கைத்தொழில் வணிகர் மன்றம்

(76422)


# கேள்வி அறிவித்தல்

## வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி

கீழ்க் குறிப்பிடப்பட்டவேலைகளுக்கான கேள்விகள் வடமராட்சி தெற்குமேற்குப் பிரதேச சபையினால் 25-07-2000 முற்பகல் 11. 00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு முற்பகல் 11. 30 மணியளவில் கேள்விச் சபையால் திறக்கப்படும். அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களே கேள்விபத்திரம் பெறுவதற்குத் தகுதியுடையவர்களாவர்.

கேள்விப் பத்திரங்களை வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச சபையின் தலைமைச் செயலகத்தில் 24-07-2000 நண்பகல் 12. 00 மணிவரை கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள கேள்விப்பத்திரப் பணத்தையும் கேள்விவைப்புப் பணத்தையும் செலுத்துவதன் பேரில் பெற்றுக்கொள்ளலாம்.

| வேலை விவரம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணம் | மீளளிக்கப்படும் கேள்விவைப்புப் பணம் |
|---|---|---|
| 1. வேதாரணியேஸ்வரா ச. ச. நிலையக் கட்டடம் அமைத்தல் | 100/- | 200/- |
| 2. துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் தலைமை அலுவலகம் | 100/- | 200/- |
| 3. திருமகள் ச. ச. நிலையம் புனரமைத்தல் | 150/- | 250/- |
| 4. இளங்கோ ச. ச நிலையம் ,, | 250/- | 1000/- |
| 5. இளங்கோ பாலர் பாடசாலை ,, | 100/- | 200/- |
| 6. குழாய்க்கிணறு திருவள்ளுவர் ச. ச. நிலையம் | 50/- | 150/- |
| 7. குழாய்க்கிணறு ஆட்டுப்பட்டி | 50/- | 150/- |
| 8. ,, — இராசலிங்கம் ச. ச. ,, | 100/- | 200/- |
| 9. ,, — வளர்மதி ச. ச. நிலையம் | 50/- | 150/- |
| 10. ,, — குடவத்தை | 50/- | 150/- |
| 11. ,, — கலிகை முருகன் கோயிலடி | 50/- | 150/- |
| 12. ,, — சர்வோதயா ச. ச. நிலையம் | 50/- | 150/- |
| 13. காவில்கிராய் வீதி | 250/- | 1000/- |
| 14. ஞானசாரியார் வீதி | 250/- | 1000/- |
| 15. இராசகிராமம் பொதுக்கிணறு புனரமைத்தல் | 150/- | 250/- |
| 16. ஸ்ரீ நாரதா பொதுக்கிணறு ,, | 100/- | 200/- |
| 17. ஆண்டாவளவு பொதுக்கிணறு ,, | 100/- | 200/- |
| 18. குழாய்க்கிணறு - நெல்லியடி உப அலுவலகம் | 100/- | 200/- |
| 19. ,, — ,, பொது நூலகம் | 100/- | 200/- |
| 20. வளர்மதி ச. ச. நிலையம் புனரமைத்தல் | 250/- | 1000/- |
| 21. கலாவாணி ச. ச. நிலையம் மலசலகூடம் அமைத்தல் | 100/- | 200/- |
| 22. நெல்லியடி பொதுச்சந்தை நீர்த்தாங்கி இடித்து அகற்றுதல் | 150/- | 250/- |

வ. நடராசா (ஜே. பி),
தலைவர்,
வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச சபை,
கரவெட்டி.

11-07-2000

(சி/12234)

# அரசாங்க அறிவித்தல்

## சுகாதாரத் திணைக்களம் - யாழ்ப்பாணம்

சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் மாவட்ட வைத்தியசாலை ஊர்காவற்றுறைக்கு பிரமாண அடிப்படையிலான நன்கொடையில் பின் வரும் உபகரணங்கள் வழங்குவதற்கான கேள்விப் பத்திரங்கள் என்னால் 31—07—2000 ஆம் திகதி நண்பகல் இலங்கை நேரம் 12.30 மணிவரை ஏற்றுக் கொள்ளப்பட்டு அன்று பி.ப. 2.30 மணிக்குத் திறக்கப்படும். இதற்கான கேள்விப் பத்திரங்களைப் பெற விரும்புவோர் மீளளிக்கப்படாத பணமாக 100 ரூபாவும் மீளளிப்புடனான கேள்விப் பிணைப் பணமாக ரூபா 5000 உம் செலுத்தி 17—07—2000ம் முதல் இப்பணிமனையில் பெற்றுக் கொள்ளலாம். படிவங்கள் 28—07—2000 பி.ப. 3.30 மணிவரை வழங்கப்படும். இக்கேள்விப் பத்திர உறைகள் அரக்கு முத்திரை இடப்பட்டு உறையின் இடது பக்க மேல் மூலையில் "மாவட்ட வைத்தியசாலை ஊர்காவற்றுறைக்கு தளபாடங்கள் வழங்குவதற்காக கேள்விப் பத்திரம்" எனக் குறிப்பிடல் வேண்டும். கேள்விப் பத்திரம் திறக்கும்போது கேள்விப் பத்திரக்காரரும் சமுகமளிக்கலாம். ஏற்றுக் கொள்ளப்படும் கேள்வித்தாரர் ஒரு மாத காலத்திற்குள் குறிப்பிட்ட தளபாடங்களை தாங்களே எமது பணிமனையில் ஒப்படைத்தல் வேண்டும். மேலதிக விவரங்கள் தேவைப்படுவோர் பணிமனை நேரத்தில் எனது பணிமனையில் பெற்றுக் கொள்ளலாம்.

1) வைத்தியசாலை ஸ்ரெச்சர்
2) சக்கர வண்டில்
3) பிரேத வண்டில்

வைத்திய கலாநிதி உ. சிவபாதசுந்தரம்
மாகாணப் பிரதிப் பணிப்பாளர்,
சுகாதார சேவைகள், யாழ்ப்பாணம்.

இல. 46, மணிக்கூட்டு கோபுர வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/ 12221)

# கண்ணீர் அஞ்சலி

எமது பணிமனையில் கடமை புரியும்
திரு. ந. முரளிதரன் அவர்களின்
அன்புத் தந்தை

## நாகமுத்து நடேசன்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

உத்தியோகத்தர்கள்.
சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை,
பருத்தித்துறை.

(சி/12231)

# யாழ்.இந்து மாணவன் கொலைக்கு கண்டனம்

யாழ். இந்துக் கல்லூரி மாணவன் சோமசுந்தரம் சஞ்சீவன் கொல்லப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து வடமாகாண ஆசிரியர் சங்கம் மற்றும் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், பல்கலைக்கழகத்தின் பல்வேறு பீட மாண்வர் ஒன்றியங்கள் அறிக்கை வெளியிட்டுள்ளன.

## வடமாகாண ஆசிரியர் சங்கம்

மாணவன் சோ.சஞ்சீவனின் பரிதாப முடிவு இந்தப் பிரதேச மாணவர்களின் எதிர்காலத்தைக் கேள்விக்குறியாக்கியுள்ளது.

- இப்படி வடமாகாண ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது. அந்தச் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மாணவன் சஞ்சீவன் கொலை செய்யப்பட்டமை குறித்து முழுச்சமூகமுமே திகிலடைந்துள்ளது. இடர்கள் மிகுந்த இந்தக் காலத்திலும் ஒளிமயமான எதிர்கால எதிர்பார்ப்பை மனதில் சுமந்து கருத்தூன்றிக் கற்று வந்த இம்மாணவனின் பரிதாப முடிவு இப்பிரதேச மாணவர்களின் எதிர்காலத்தைக் கேள்விக்குறியாக்கியுள்ளது.

இந்தச் சம்பவத்தை இலங்கை ஆசிரியர் சங்க யாழ். மாவட்டக் கிளை வன்மையாகக் கண்டிப்பதோடு சம்பந்தப்பட்டோர் அடையாளம் காணப்பட்டு தண்டிக்கப்படவேண்டும் எனவும் கோருகிறது. இத்தகைய சம்பவங்கள் எதிர்காலத்தில் தொடராதிருக்க உருப்படியான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படல் வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றது - என்றுள்ளது.

## பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்

யாழ்ப்பாணத்தில் சிவில் நிர்வாகம் நடைபெறுகின்றது என்று வெளியுலகுக்குக் காட்டிக் கொண்டு மிலேச்சத்தனமான படுகொலைகளை மாணவர்கள் மீதும் அப்பாவிப் பொதுமக்கள் மீதும் பிரயோகிக்க வேண்டாம் என பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அரசை வற்புறுத்திக் கேட்கிறது.

- யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மாணவன் சஞ்சீவன் படுகொலை செய்யப்பட்டதை யாழ். பல்கலைக்கழக மாணவர் சமூகம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கிறது.

இவ்வாறான படுகொலைகள் மாணவர்கள் மீதும், அப்பாவிப் பொதுமக்கள் மீதும் நடத்தப்படுவதையிட்டு நாம் மிகவும் வேதனையடைகின்றோம்.

இத்தகைய மனித உரிமை மீறல்களை மேற்கொள்கின்றவர்கள் மீது தகுந்த சட்ட நடவடிக்கைகளை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட தரப்பினர்களை கேட்டுக்கொள்கின்றோம்.

தெற்கில் இருந்து கொண்டு மனித உரிமைகள் பற்றிப் பேசுகின்ற - மனித உரிமைகளுக்கான யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சமூகம் எனத் தம்மைத் தாமே அழைத்துக் கொண்டு யாழ்ப்பாணத்தில் நடைபெறுகின்ற படுகொலைகள், பாலியல் வல்லுறவுகள், கைதுகள் போன்றவற்றைக் கண்டும் காணாதது போல் இயங்கும் - இந்த அமைப்பை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம் - என்றுள்ளது.

## முல்லை மாவட்ட மாணவர் ஒன்றியம்

யாழ். பல்கலைக்கழக முல்லைத்தீவு மாவட்ட மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அனைத்துத் தமிழ் சமுதாயத்தினையும் பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கிய இந்தப் படுகொலையை ஒருமித்த பல்கலைக்கழக சமூகமாக கண்டிப்பதோடு கொலை புரிந்தவர்களை சட்டத்தின் முன் நிறுத்துமாறு சம்பந்தப்பட்ட தரப்பினரை வேண்டுகிறோம். அத்துடன் இத்தகையவன்முறைகள் தொடராதவாறு சம்பந்தப்பட்ட தரப்புக்கள் நடந்துகொள்ள வேண்டும் - என்றுள்ளது.

## விஞ்ஞானபீட மாணவர் ஒன்றியம்

யாழ்.பல்கலைகழக விஞ்ஞான பீட மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கடந்த 13 ஆம் திகதி மாலை ஊரடங்கற்ற வேளையில் கொக்குவில் பகுதியில் வைத்து மாணவன் சஞ்சீவன் படுகொலை செய்யப்பட்டான். ஓர் அப்பாவி மாணவன் கொடூரமான முறையில் தாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்ட செயல் மிகவும் காட்டுமிராண்டித்தனமானதாகும்.

இதனை எமது பல்கலைக்கழக சமூகம் வன்மையாகக் கண்டிக்கிறது. கொலையாளிகளைச் சட்டத்தின் முன் நிறுத்த அரசு உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும். - இப்படி தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மருத்துவபீட மாணவர் ஒன்றியம்

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

மாணவன் சஞ்சீவன் தலையாழிப் பகுதியில் வைத்துப் படுகொலை செய்யப்பட்ட சம்பவமானது பாடசாலை மாண்வர்களை மட்டுமன்றி யாழ். சமுதாயத்தையே பெரும் பதற்றத்துக்கும், பீதிக்கும் உள்ளாக்கியிருக்கின்றது. இவ்வாறான கொலைகள் தொடர்வது மிகவும் வருத்தத்துக்குரிய விடயம் ஆகும்.

எனவே இவ்வாறான சம்பவங்கள் இனிமேலும் தொடர்வதை உடனடியாக நிறுத்தி மாணவர்களின் கல்விக்கும், அவர்களின் பாதுகாப்புக்கும் உத்தரவாதம் வழங்கவேண்டும். அது மட்டுமன்றி குற்றமிழைத்தவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்படவேண்டும்.

மேலும் அன்னாரின் பிரிவால் துயருறும் அனைத்து உள்ளங்களுடன் நாமும் இத்துயரைப் பகிர்ந்து கொள்கின்றோம் - என்றுள்ளது.

## விவசாய மாணவர் ஒன்றியம்

யாழ்.பல்கலைக்கழக விவசாய மாணவர்கள் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அப்பாவி மாணவன் சஞ்சீவனின் படுகொலைக்கு தமிழ்ப் பேசும் சமூகத்தின் ஓர் அங்கமான விவசாயபீட மாணவர் ஒன்றியம் தனது பலத்த கண்டனத்தை தெரிவித்துக்கொள்கிறது.

சொல்லொணாத் துயரங்களுக்கும், துன்பங்களுக்கும் மத்தியில் தமது கல்விச் செயற்பாடுகள்ள செவ்வனே செய்துகொண்டிருக்கும் இன்றைய தமிழ்பேசும் மாணவ சமுதாயத்திலே அப்பாவி மாணவனான சஞ்சீவனும் ஓர் அங்கம். தனது எதிர்காலத்துக்காகவும் தனது குடும்பத்தின் நல்வாழ்வுக்காகவும் ஏன் நாட்டுக்கு ஓர்கல்விச்சீமானாகவும் வரவேண்டும் என்ற கனவுடன் தனது உயர்தரக்கல்வியை மேற்கொண்டிருந்த வேளையில் பயிரையே மேயும் வேலிகளாய் இருக்கின்ற கோழைகளின் அரக்கத்தனமான தாக்குதலால் சிதைந்து போனான்.இந்த மாணவனின் கொலையில் சம்பந்தப்பட்ட கொலையாளிகளை சட்டத்தின் முன் நிறுத்தி தண்டிக்க வேண்டும். - என்றுள்ளது.

# இறுதிச் சடங்கில் சகலரையும் பங்குபற்றுமாறு வடமாகாண அதிபர்கள் சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜுலை17

இன்று நடைபெறும் யாழ்.இந்து மாணவன் அமரர் சோ.சஞ்சீவனின் இறுதிக் கிரியைகளில் சகல பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரையும் கலந்துகொண்டு அமரத்துவம் அடைந்த மாணவனுக்கு இறுதி அஞ்சலி செலுத்துமாறு வடமாகாண அதிபர்கள் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக மேற்படி சங்கம் நேற்று விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அண்மையில் இடம்பெற்ற பல்வேறு சம்பவங்களினாலும் இடம்பெயர்வுகளாலும் எமது மாணவர் சமூகம் தனது கல்வியை மேலும் இழந்துள்ளது.

எவ்வாறாயினும் எமது கண்டனத்தை ஒருமனதாகத் தெரிவிக்கும் தார்மீக உரிமையிலிருந்து நாம் தப்பிவிட முடியாது. அதனால்தான் நாம் ஒருமித்தும் ஒரே குரலிலும் காட்டிய எதிர்ப்பினாலும் கண்டனத்தாலும் இராணுவ உயர் அதிகாரிகளும், பொலீஸ் உயர் அதிகாரிகளும் அமரர் சோ.சஞ்சீவனின் மரணம் தொடர்பாக நீதியான விசாரணை நடத்த நீதிமன்றத்துக்கு இவ்விவகாரத்தை எடுத்துச்செல்ல இணங்கியுள்ளதுடன் இது போன்ற சம்பவங்கள் தொடர்ந்து நடைபெறாதிருக்கவும் உறுதியளித்துள்ளனர்.

எமது மாணவரின் கல்வியையும் பாதுகாப்பையும் எல்லா விதத்திலும் தடுக்கும் எந்த சக்தியையும் நாம் அனுமதிக்க முடியாது.

இழந்த கல்வியை எமது மாணவர்கள் மீளப்பெற வேண்டியது மிக அத்தியாவசியமானது. அதனால் மாணவர்கள் தமது சோகத்தை சக்தியாக்கி இழந்த கல்வியை மீட்கும் தமது கல்விப் பாரம்பரியப் பணியை தொடரவேண்டும். எனவே பாடசாலைகளுக்கும் கல்வி நிலையங்களுக்கும் மாணவர்கள் நாளை முதல் சென்று தமது கற்றல் நடவடிக்கையைத் தொடர வேண்டும்.

- இப்படி அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ்.இந்து மாணவருக்கு

யாழ்ப்பாணம்,ஜுலை17

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் சாரணர் குழு, சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ், செஞ்சிலுவைக் குழு ஆகியவற்றின் உறுப்பினர்களை இன்று காலை உரிய சீருடைகளுடன் சமுகம் தருமாறு பாடசாலை நிர்வாகம் கோரியுள்ளது. (உ)

# சீரற்ற தொலைபேசிச் சேவையால் வர்த்தக நடவடிக்கைகள் பாதிப்பு

## யாழ்.வணிகர் கழகம் அறிக்கை

யாழ்ப்பாணம்,ஜுலை17

தொலைபேசிச்சேவை சீராகாததால் கொழும்புடன் தொடர்புடைய தங்கள் வர்த்தக நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதாக யாழ்.வணிகர் கழகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக வணிகர் கழகம் விடுத்துள்ள பத்திரிகை குறிப்பு வருமாறு :-

கடந்த இரண்டு மாதங்களாக பெரும்பாலான யாழ் வர்த்தகர்கள் தங்களின் வியாபாரம், மற்றும் கப்பலில் பொருள்கள் ஏற்றுவது பற்றிய விவரங்களை கொழும்பிலுள்ள முகவர்கள், வாடிக்கையாளர்கள் ஆகியோருடன் தொலைபேசி மூலம் பெற்றுக்கொள்ள எடுத்த முயற்சிகள் யாவும் பயனற்றுப்போன நிலையில் 5.07.2000 அன்று யாழ் ரெலிக்கொம் நிறுவன மாவட்ட பொது முகாமையாளர் எஸ்.கனகசூரியர் அவர்களுடன் கலந்துரையாடுவதற்கு நேரம் ஒதுக்கித் தரும்படி கேட்டோம் அன்று பகல் 12.00 மணிக்கு யாழ் வணிகர் கழகத் தலைவர், செயலாளர் சென்ற ஆண்டுத் தலைவர் ஆகிய மூவரும் அவரைச் சந்தித்தோம்.

சந்திப்பின்போது முதல் அவர் குறிப்பிட்ட விடயம் தான் என்ன கூறுகின்றாரோ அதனை நாம் கேட்க வேண்டும் என்பதே. தற்போது யாழ் வர்த்தகர்களுக்கோ, அன்றிப் பொது மக்களுக்கோ உதவக் கூடிய நிலையில் இல்லை என்பதனை அவரது பேச்சு எமக்குப் புலப்படுத்தியது. அவரது ஒவ்வொரு வசனமும் அவர் இலாபத்தினை

(12 ஆம் பக்கம் பார்க்க)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



இலங்கை செஞ்சிலுவைச் சங்க கோப்பாயப் பிரிவு செயலாளரும் சமூக சேவையாளருமான நாயன்மார்கட்டு பாரதி வீதியைச் சேர்ந்த

**திரு. இ. மயில்வாகனம் (J.P)**

(பிரதம தபாலகம், யாழ்ப்பாணம்)

அவர்கள் சமாதான நீதிபதியாக நியமனம் பெற்றமையைப் பாராட்டுகின்றோம். அவரது பணி சிறப்புற வாழ்த்துகின்றோம்.

*வைத்திய கலாநிதி வை. தியாகராசா*
*தலைவர்,*
*இ.செ.சங்கம்,*
*கோப்பாய்ப் பிரிவு.*

(C/12240)



ராஜா
(யாழ்ப்பாணம்)
பிரபுதேவா, ரோஜா
சரத்குமார், கபாலி
மற்றும் பலர் நடிப்பில்
இனிய பாடல்கள்
நிறைந்த
இந்து
புதிய நேரம் 10.30, 2.00
(C/12207)



நாகம்ஸ்
(சுன்னாகம்)
ரஜனி, சௌந்தர்யாவின்
படையப்பா
(ரீல்ஸ்)
காட்சிகள்:-
11.00, 2.30
(புதிய நேரம்)
(C/12232)



பாதுகாப்பான சூழலில்
I.B.S கல்வி நிறுவனம்
தரம் 4 முதல் O/L வரை
ரெயில் கடவை அருகில்
கோயில் வீதியில்
இன்று தொடக்கம்
நடைபெறும்.
ஆசிரியர், மாணவர்கள்
தொடர்பு கொள்ளவும்.
MATHS 1.30 p.m
C.K.B. தயாளன்
(76437)



## 45ஆம் நாள் அஞ்சலி



வித்துவான், பண்டிதர், சைவப்புலவர்

**விநாயகமூர்த்தி நவரத்தினம் B.A**

தமிழிலே பெரும்புலவன் வித்தகன் நீ
தமிழ் என்றால் துள்ளிடுமே நின்னிதயம்
தமிழ் கற்றல், கற்பித்தலில் உமைமறந்து ஒன்றிடுவீர்
உம்பெருமை பிறர் சொல்லக் கேட்டிருந்தோம்
தமிழ் உங்கள் உயிர் என்பீர் - உங்கள்
உடல் சொந்த மண்ணுக்கே உரமாக்கி
உனதாணை நிறைவேற்றி வைத்தோம்
சொந்த நாட்டில் உயிர்விடல் விரும்பி
தொலைதூரம் எம்மிடம் வர மறுத்தீரே
முழுநிலவாய் எம்மீது பொழிந்தீர் பாசம்
எங்கள் வாழ்வுக்கு வளம்சேர்த்த வள்ளலே
ஆயிரம் பிறை கண்ட எங்கள் ஐயாவே
ஆற்றாதே உம்பிரிவு ஆறாதே எம்துயரம்
அன்னையவள் அடிசேர்ந்த அமரரேறே!

உங்கள் நினைவால் நெக்குருகி நிற்கும்

*மனைவி, பிள்ளைகள்,*
*மருமக்கள்,*
*பேரப்பிள்ளைகள்.*

"அன்னை இல்லம்"
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

(C/12235)

# திருமணத்துக்குச் செல்ல விசேட கப்பல் சேவை

திருமணத்திற்காக கொழும்பு செல்லும் பயணிகளுக்கு விசேட கப்பல் சேவை ஒன்றை ஏற்பாடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக யாழ்.சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது.

திருமணத்துக்குச் செல்வதற்கான ஆவணங்களுடன் வந்து தமது பதிவுகளை இன்று முதல் மேற்கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

திருமணம் செய்யச் செல்பவருடன் அவரது உறவினர் மூவர் செல்ல அனுமதி வழங்கப்படும் என்றும்-

ஏற்கனவே யாழ்.சிவில் அலுவலகத்தில் பதிவுகளை மேற்கொண்டவர்கள் மட்டுமே புதிய பதிவுகளை மேற்கொள்ள முடியும் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

ஒரு சேவையில் செல்லக் கூடிய அளவு அதாவது 250 பேர் பதிவு செய்யும் பட்சத்தில் அவர்களுக்கு விசேடசேவை ஒன்றை நடத்த ஏற்பாடு செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

## ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகள் வவுனியாவுக்கு

கொழும்பு வந்துள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் இரு நாடாளுமன்ற உறுப்பினர்களும் இன்று வவுனியாவுக்கு விஜயம் மேற்கொள்கின்றனர். (இ-3-164)

# இந்த நாடாளுமன்றில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ருத்த வரைவு நாடளுமன்றத்தில் சமர்பிக்கப்படும். அதன் பின்னர் தேர்தல் மூலம் தெரிவாகும் புதிய நாடாளுமன்றத்தில் இந்த அரசமைப்பு நகல் தொடர்பான விவாதம் மற்றும் வாக்களிப்பு இடம்பெறும்.

அதன்பின்னரே அந்த வரைவுக்கு மக்கள் அங்கீகாரத்தைப் பெறுவதற்கான சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படும்.

புதிய அரசமைப்பை நிறைவேற்ற எடுக்கப்படும் முயற்சிகளுக்கு குந்தகம் விளைவிப்பவர்களும் உள்ளனர். அத்தகையோரின் முயற்சிகள் சகல மக்களையும் பாதிக்கும்.

இந்தப் புதிய அரசமைப்பு நிறைவேற்றப்படும்போது சகல மக்களின் பிரச்சினைகளுக்கும் தீர்வு கிட்டும்.

சில கட்சியினர் இந்த அரசமைப்புச் சீர்திருத்தத்தை எதிர்க்கிறார்கள். எவர் எதிர்த்தாலும் அந்த வரைவை நிறைவேற்றியே தீருவேன்.

என்ன விலை கொடுத்தாவது இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்கு அரசு தன்னை அர்ப்பணித்துள்ளது.

தற்போதைய பிரச்சினை தொடர்வதால் ஏற்படும் இழப்புகளை எதிர்கொள்ளும் நிலையில் அரசாங்கம் இல்லை.

அப்பாவித் தமிழ், முஸ்லிம் மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதுடன், பிரபாகரனின் பயங்கரவாத அரசியலைத் தோற்கடிப்பதற்கான அவசியமும் உருவாகியுள்ளது.

புதிய அரசமைப்பு அனைத்துத் தரப்பினரதும் உரிமைகளைப் பேணுவதுடன் தேசியப் பிரச்சினைகளையும் நிரந்தரமாகத் தீர்த்து வைக்கும்.

இந்த அரசு வரையறுக்கப்பட்ட காலத்துக்குமேல் ஒரு போதும் பதவியில் இருக்காது.

ஒகஸ்ட் மாதம் 24ம் திகதி நள்ளிரவுடன் இந்நாடாளுமன்றத்தின் அதிகாரம் முடிவுக்கு வரும்.

இதுவரை நடந்த ஆறு தேர்தல்களிலும் வெற்றி கொண்டுள்ள பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் நோக்கம் நியாயமான, நேர்மையான தேர்தல்களை நடத்துவதுதான்.

எனினும் இந்த தேர்தல்களில் இடம்பெற்ற முறைகேடுகள் கவலைக்குரியவை.

எதிர்காலத்தில் எந்தவொரு அரசியல்வாதியின் அதிகாரத்திற்கும் கட்டுப்படாமல் தமது கடமைகளை அரச நிர்வாக அதிகாரிகள் நிறைவேற்ற வேண்டும்.

மக்களுக்கு செயற்திறன் வாய்ந்த சேவைகளை வழங்கும் அதிகாரிகளுக்கு ஏற்ற சூழ்நிலையை ஏற்படுத்தும் நோக்கில் நிர்வாக சேவைகள் மறுசீரமைக்கப்படும்- என்றார் ஜனாதிபதி.

# சீரற்ற தொலைபேசி....

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நோக்கமாகக் கொண்ட ஒரு நிறுவனத்தின் அதிகாரி என்பதனைப் புலப்படுத்தியது. தங்களின் நிறுவனம் ஒர் இலாப நோக்கம் கொண்டது எனவும் தற்போது ரூபா 10 ஆயிரத்துக்கு மேல் தங்களுக்கு மாதாந்தம் வருமானம் காட்டியவர்களுக்கே முன்னுரிமை வழங்கப்படுமெனவும், மற்றவர்களுக்கு நிலைமை சீராகும்போது கவனிக்கப்படும் எனவும் குறிப்பிட்டார்.

தற்போதைய சூழ்நிலையில் எமது வர்த்தகர்கள் கொழும்பு முகவர்களுடன் அவ்வப்போது தொடர்பு கொண்டு யாழ்.மாவட்டத்திற்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களைக் கொழும்பில் கப்பலில் ஏற்றி யாழ்ப்பாணம் அனுப்புவதற்கு உள்ள ஒரேயொரு தொடர்பு சாதனம் தொலைபேசி. தற்போது கடலில் மூழ்கிய "உஹுண" கப்பலில் பாதிக்கப்பட்ட வர்த்தகர்கள் தமது இழப்பீடு பற்றிய விவரங்களை தமது முகவர்களிடம் இதுவரை பெறமுடியாத நிலையில் உள்ளனர். வர்த்தகர்கள் காலை 9.00 மணிக்கு வந்து கடைகளைத் திறந்த பின்பே தொலைபேசிச் சேவையைப் பதிவு செய்து பெற முடியும். அவர்கள் காலை 9.00 மணியின் பின் ரெலிக்கொம் நிறுவனத்துடன் தொடர்புகொண்டு தங்களுக்குத் தேவையான அழைப்பைப் பதிவு செய்வதற்கு கோரும்போது அழைப்புப் பதிவுகள் எல்லாம் முடிந்ததாக ரெலிக்கொம் நிறுவன ஊழியர் கூறிவிடுகின்றனர்.

இப்படியான நிலைமையை நாம் விளக்கிக் கூறியும் யாழ். வர்த்தகர்களுக்குத் தொலைபேசி வசதி செய்து கொடுக்க முடியாது. ரூபா 10 ஆயிரத்துக்கு மேல் மாதாந்தம் தமக்கு வருமானம் செலுத்தும் தொலைபேசி முகவர்களுக்கு மட்டுமே தொலைபேசி அழைப்புப் பெற்றுக் கொடுப்பதென கூறும் அதிகாரிகள் தங்களின் நிறுவனம் இலாபநோக்கோடு சேவை நோக்கத்தையும் கொண்டுள்ளது என்பதனை மறந்த நிலையில் [illegible] பதில் அளித்தது [illegible]தாக அமைந்துள்ளது.

10 ஆயிரம் ரூபாவுக்கு மேல் வருமானம் தேடிக் கொடுக்கும் தாம் விரும்பும் தொலைபேசி முகவர்களுக்கே இப்படியான ஏகபோக உரிமைகளை வழங்குவதால் அவர்கள் இச் சேவைக்கு மேலதிகமாக தாம் நிர்ணயிக்கும் தொகையைப் பொதுமக்களிடம் அறவிடுவது பொதுமக்களைப் பெரிதும் பாதிக்கின்றது. அத்துடன் பெருந்தொகைப் பணத்தைச் சென்ற ஆண்டு ரெலிக்கொம் நிறுவனத்திற்குச் செலுத்தி தொலைபேசிச் சேவையைப் பெற்ற வர்த்தகர்கள் தற்போது தொலைபேசியை மேசை மேல் வைத்திருப்பது வர்த்தக நிலையத்தை அழகுபடுத்துவதற்கா என்பதனை ரெலிக்கொம் நிறுவன அதிகாரிகள் உணர்வதாகத் தெரியவில்லை. தாங்கள் ரெலிக்கொம் வாடிக்கையாளர்களை காசுக்கு(தொகைக்கு) முன்னுரிமை என்பது தொலைபேசி எடுத்த மற்றவர்கள் நிலை என்ன என்பது தெளிவாகத் தெரியவில்லை., மற்ற வாடிக்கையாளர் செலவுகள் செய்து பெற்ற தொலைபேசியின். நிலை என்ன? ஒரு நாளைக்கு ஒரு வெளியிடத் தொடர்பு கொடுத்தால் என்ன? என்ற நிலையில் வாடிக்கையாளர்கள் மனக்கொதிப்பை வெளியிடுகிறார்கள். சில கஷ்டங்கள் உண்டு என்பதனை மறுப்பதற்கில்லை. ஆனால் மற்றவர்களை திருப்திப்படுத்தும் நிலையில் எல்லா வாடிக்கையாளர்களையும் திருப்திப்படுத்தினால் என்ன? ரெலிக்கொம் நிறுவனம் ஒரு சேவை நோக்கம் கொண்ட வர்த்தக நிறுவனமாக இருப்பதனால், தமது இலாப நோக்கோடு சேவையையும் கருத்திற் கொள்ள வேண்டும். அவர்கள் அதனைச் செய்வார்களா? கீரைக்கடைக்கும் எதிர்க்கடை வேண்டும் என்பது போல் "ரெலிக்கொம்" நிறுவனம் போன்று அதற்குப் போட்டியாக இன்னுமொரு வெளிநாட்டு நிறுவனத்தை யாழ். குடாநாட்டிற்கு பெறுவதற்கு எமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் முயற்சி செய்வார்களா?- [illegible] தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# கூரேயின் கட்சி வடக்கு – கிழக்கில் போட்டி

முன்னாள் அமைச்சரும், ஐ.தே.கவில் இருந்து பிரிந்து சென்று பிரஜைகள் முன்னணி என்ற கட்சியை ஆரம்பித்துள்ளவருமான சிறிசேன கூரே தமது கட்சி வடக்கு - கிழக்கில் யாழ் மாவட்டம் தவிர்ந்த சகல தொகுதிகளிலும் போட்டியிடவிருப்பதாக அறிவித்துள்ளார். (இ-3)

# சஞ்சீவனின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்திப்பு இடம்பெற்றது.

கல்விச் சமூகத்தின் சார்பில் யாழ். மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி என்.தணிகாசலம்பிள்ளை, வடமாகாண அதிபர்கள் சங்கத் தலைவரும், யாழ். மத்திய கல்லூரி அதிபருமான கே. இராஜதுரை, யாழ். இந்துக் கல்லூரி அதிபர் அ.ஸ்ரீக்குமரன் மற்றும் யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கப் பிரதிநிதி ஆகியோர் கலந்து கொண்டனர்.

படையினர் மற்றும் பொலீஸார் தரப்பில் 51 ஆவது படையணிக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் காமினி ஜயசுந்தர, யாழ். சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் யு.காமினி குணசேகரா மற்றும் யாழ்ப்பாணம், சுன்னாகம் பகுதிகளின் படைஅதிகாரிகள், பொலீஸ் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

சம்பந்தப்பட்ட மாணவன் கல்லூரியின் கணிதப் பிரிவில் திறமையை வெளிப்படுத்தியவர்களில் ஒருவர் என்றும் -

அவரது குடும்பத்தவர்களைக் கடந்த பல தசாப்தங்களாகத் தனக்கு நன்கு தெரியும் என்றும்-

அந்த மாணவனுக்கும் இயக்க நடவடிக்கைகளுக்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை என்று தான் உறுதியாகக் கூறுவதாகவும் -

யாழ். இந்துக் கல்லூரி அதிபர் குறிப்பிட்டார். ஏனைய பிரதிநிதிகளும் இதேகருத்தை வலியுறுத்தினர்.

இந்தப் படுகொலை குறித்து நீதியான - பக்கச்சார்பற்ற - விசாரணை நடத்தப்படவேண்டும் எனவும், இத்தகைய சம்பவங்கள் கல்விச் செயற்பாடுகளைப் பாதிக்கும் எனவும், எனவே உரிய நடவடிக்கையை எடுப்பதன் மூலம் மாணவர்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்தமுடியும் என்றும் கலாநிதிஎன். தணிகாசலம்பிள்ளையும், அதிபர் கே. இராஜதுரையும் வலியுறுத்தினர்.

விடுதலைப் புலிகளின் இரு தலைவர்களைப் படையினர் பிடிக்க முயன்ற சமயம் சம்பந்தப்பட்ட இந்த இளைஞரும் அவர்களுடன் சேர்ந்து தப்பியோட முயன்றதாகவும்-

அப்போது படையினர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் அந்த இருவருக்கும் உதவியாகச் செயற்பட்டவராகக் கருதப்படும் இந்த இளைஞன் உயிரிழந்ததாகவும்-

அவரிடமிருந்து கிரனேட் உட்பட சில பொருள்கள் மீட்கப்பட்டதாகவும் -

இராணுவத் தரப்பில் தமக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளதாக படையணித் தளபதி குறிப்பிட்டார்.

அது தவறு என்று மறுத்துக் கூறிய தூதுக்குழுவினர், சம்பந்தப்பட்ட மாணவனைப் பிடித்து வைத்திருந்த பின்னரே அவர் சுடப்பட்டிருக்கின்றார் என்றும் அதற்கு முன் அவர் தாக்கப்பட்டிருக்கின்றார் என்றும் கூறப்படுவதாக தெரிவித்தனர்.

இதனை சட்ட வைத்திய அதிகாரியின் பிரேத பரிசோதனை அறிக்கையும் நிரூபிக்கும் எனத் தாங்கள் எதிர்பார்ப்பதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

அதனை நிரூபிப்பதற்கு மேலதிக சாட்சியங்களை மரணவிசாரணையின்போதும், நீதிமன்ற விசாரணையின்போதும் ஆஜர் செய்ய நடவடிக்கை எடுக்கும்படியும்-

மாணவனின மரணம் தொடர்பான விசாரணைகளில் இதுவரை தாயாரைத் தவிர வேறு எவரும் சாட்சியமளிக்க முன்வரவில்லை என்றும் - சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் தெரிவித்தார்.

இது விடயத்தில் பக்கச்சார்பற்ற நீதி விசாரணை நடப்பதை உறுதிப்படுத்தும்படியும் படை அதிகாரிகளோ அல்லது வேறு எவருமோ இந்த விசாரணைகளில் தலையிட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் யாழ். இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா உத்தரவிட்டிருப்பதாகவும் ஜெனரல் ஜயசுந்தர தெரிவித்தார்.

சம்பந்தப்பட்ட நீதி விசாரணைக்குரிய சாட்சியங்களை ஆஜர் செய்வதற்கு தூதுக் குழுவினர் உறுதியளித்தனர். (உ)

## புலிகளின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் ஏற்காதவரை அதனால் முழுப் பயனும் அடைய முடியாதென நானும், நான் சார்ந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்கட்சியும் தெளிவாகக் கூறியிருக்கின்றோம்.

புண்டார - செல்வா ஒப்பந்தம், சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம், இலங்கை - இந்திய ஒப்பந்தம் உட்படப் பல ஒப்பந்தங்கள் இனப் பிரச்சினைத் தீர்வுக்காக முன்வைக்கப்பட்டு பயனற்றுப்போன நிலையில் இன்று ரணில் - சந்திரிகா ஒப்பந்தம் செய்யப்பட்டு வடக்கு - கிழக்கில் இடைக்கால நிர்வாக சபையொன்று நிறுவ முயற்சிகள் நடைபெறுகின்றன.

இந்த இடைக்கால நிர்வாக சபையை ஏற்படுத்தினால் இங்கு பெரும் அழிவுகள் ஏற்படும் என்றும் விடுதலைப் புலிகளையும், மக்களின் அபிலாஷைகளையும் நிறைவு செய்யாத எந்தத் தீர்வும் பயனளிக்கப் போவதில்லையென்றும் நாம் தெளிவுபடுத்தியிருக்கின்றோம்.

இனப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு ஏற்பட எப்படியாவது விடுதலைப் புலிகளைப் பேச்சுவார்த்தைக்கு அழைக்குமாறும் ஜனாதிபதிக்கு நாம் வேண்டுகோள் விடுத்துள்ளோம் - என்றார். (ஐ-3)

## ஊரடங்கு வேளையில் திருட்டு

வண்ணார்பண்ணையில் உள்ள வீடு ஒன்றில் இருந்து இரண்டு மோட்டார் சைக்கிள்கள், ஒரு ஜெனரேட்டர் மற்றும் இரு சைக்கிள்கள் என்பன ஊரடங்கு நேரத்தில் திருடப்பட்டுள்ளன.

இச்சம்பவம் வெள்ளி இரவு சிவப்பிரகாசம் வீதியில் உள்ள ஒரு வீட்டிலேயே இடம்பெற்றுள்ளது. (ஐ-74)

## கலட்டி அம்மன் உற்சவம் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜூலை17

வண். கிழக்கு கலட்டி எச்சாட்டி மஹாமாரி அம்மன் ஆலய மஹோற்சவம் நாளை மறுதினம் புதன்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

சிவத்திரு. தாணுவாசுதேவக் குருக்கள் கொடியேற்றத்தை நிறைவு செய்வார்.

இந்த ஆலய உற்சவத்தை ஒட்டி கலட்டி அம்மன் வீதி, சீனியர் ஒழுங்கை என்பனவற்றிலுள்ள இராணுவத் தடைகள் மற்றும் மிதிவெடிகளை இராணுவத்தினர் அகற்றி மக்களின் பாவனைக்கு அவற்றைத் திறந்துவிட்டுள்ளதாக ஆலய நிர்வாகம் அறிவித்துள்ளது.

இதன் காரணமாக ஆறு வருடங்களின் பின்னர் அம்மன் வீதி உலா வருவதற்கு வாய்ப்புக் கிட்டியுள்ளதாகக் கூறப்பட்டது. (இ-3)

# தொலைபேசி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கவும், பொறுப்பற்ற முறையிலும் நடந்துகொள்வதாகவும் அங்கு பேசிய பலரும் விசனம் தெரிவித்தனர்.

இந்தக் கூட்டத்தின் இறுதியில் யாழ். மாவட்டத் தொலைபேசி உரிமையாளர் சங்கம் ஒன்றும் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களும், உரையாடப்பட்ட விடயங்களும் வருமாறு:-

* தொலைபேசிச் சேவையினை ஒழுங்குபடுத்துவது குறித்து 'ரெலிக்கொம்' நிறுவன அதிகாரிகளுடன் கலந்துரையாடல் நடத்துதல்.

* அதன் பின்னரும் உரியதீர்வு கிடைக்காது விட்டால் சட்ட நடவடிக்கை எடுப்பது பற்றி ஆலோசித்தல்.

* யாழ். மாவட்டத்தில் முறை தவறி வழங்கப்படும் தொலைபேசி சேவை குறித்து ஆய்வு மூலம் கண்டுபிடித்தல்.

* இந்த ஆய்வுக்கு யாழ்ப்பாணத்தில் உள்ள அதிகாரிகள் ஒத்துழைப்பு வழங்காது விட்டால் கொழும்புடன் தொடர்பு கொள்ளுதல்.

* தொலைபேசிச் சேவைக் குழப்பங்கள் தொடர்பாக பத்திரிகைகளில் செய்திகள் மட்டுமே வெளியிடப்பட்டன. இது தொடர்பாக 'ரெலிக்கொம்' நிறுவனம் உத்தியோகபூர்வமாக அறிவிப்பு எதனையும் விடுக்கவில்லை. உத்தியோகபூர்வ அறிவிப்புக்கள் அவ்வப்போது - தவறாது - விடுக்கப்பட வேண்டும்.

* இலங்கையில் 22 தனியார் தொலைபேசி நிறுவனங்களுக்கு உரிமம் வழங்கப்பட்டுள்ளது. ரெலிக்கொம் நிறுவனம் ஒத்துழைக்காது விட்டால் மேற்குறிப்பிட்ட நிறுவனங்களில் ஏதாவது ஒன்றினை யாழ்ப்பாணத்துக்கு வரவழைக்க வேண்டும்.

* மாதம் 10 ஆயிரம் ரூபாவுக்கு மேல் தமக்கு வருமானத்தைச் செலுத்தும் தொலைபேசி உரிமையாளர்களுக்கு மட்டுமே தொலைத் தொடர்பில் முன்னுரிமை அளிக்கப்படும் என்று ரெலிக்கொம் அதிகாரிகள் நிபந்தனைகள் விதிப்பதை ஏற்கமுடியாது.

* வவுனியா, மட்டக்களப்புப் பகுதிகளில் பல தடவைகள் தொலைத்தொடர்புக் கோபுரங்கள் தகர்க்கப்பட்டபோதும் அவை உடனடியாகச் சீர்செய்யப்பட்டன. ஆனால் யாழ்ப்பாணத்தில் மட்டும் ஏன் தொலைத்தொடர்புக் கோபுரத்தை உடனே சீர்செய்ய முடியவில்லை?

* தொலைபேசிச் சேவை இன்று ஓர் அத்தியாவசியமான சேவையாகிவிட்டது. இலங்கையில் 58 பேருக்கு ஒரு தொலைபேசி என்ற வீதத்தில் தொலைபேசிகள் சேவையில் இருக்கின்றன.

* கல்விச் செயற்பாடுகளிலும் இந்தச் சேவை முக்கியத்துவம் பெறுகிறது. 'ஈமெயில்', 'இன்ரநெட்- வெப்சைட்' போன்றவற்றுக்கு தொலைபேசி சேவை அவசியமானது.

* யாழ். மாவட்டத் தொலைபேசி உரிமையாளர் சங்கம் 'ரெலிக்கொம்' நிறுவனத்துக்கு எதிரானது அல்ல. தொலைபேசிச் சேவையை ஒழுங்குபடுத்துவதே சங்கத்தின் நோக்கமாகும்.

* யாழ்ப்பாணத்துக்கும் வெளியிடங்களுக்கும் இடையில் தற்போது குறைந்தது எட்டுத் தொலைபேசி இணைப்புக்களாவது இயங்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது. எனவே இந்தச்சேவையை ஓரளவுக்காவது ஒழுங்குபடுத்திக் கொடுக்க வேண்டும். (உ-5)


A/L 2002

கருத்தரங்கு

கணக்கீடு
D.SAM

பகுதி I 18.07.2000 செவ்வாய் காலை 11 மணி
பகுதி II 19.07.2000 புதன் காலை 11 மணி

D.M.I
யாழ்.நகர்

குறிப்பு :- முன்பு அறிவிக்கப்பட்ட திகதியின் மாற்றத்தைக் கவனிக்கவும்.

(C/12238)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிரைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17.07.2000 இல் அச்சிட்டு வெளியி[illegible]